₹100/-

# ஞானகுரு தமிழ் லீடர்

எஸ்.கே.முருகன்

ஏப்ரல் 2024

ஜாலியா... கேலியா ஓர் அரசியல் இதழ்



## 40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

# உங்க தொகுதியில் ஜெயிக்கப்போவது யாரு..?

படித்துவிட்டீர்களா








ஆசிரியர் பக்கம்



# தமிழகத்தில் வித்தியாசமான தேர்தல்..!

தமிழகத்தில் நான்கு முனைப் போட்டி என்று சொல்லப்பட்டாலும், இருமுனைப் போட்டி என்பதே உண்மை. தி.மு.க கூட்டணியை எடப்பாடி பழனிசாமி கீழ்த்தரமாக விமர்சனம் செய்கிறார். தி.மு.க. கூட்டணியை பிரதமர் மோடி கடுமையாக விமர்சனம் செய்கிறார். தி.மு.க. கூட்டணியை நாம் தமிழர் சீமான் மிக மோசமாக விமர்சனம் செய்கிறார். ஆக, தி.மு.க. எதிர்ப்பு என்பதில் மட்டும் மூன்று கட்சியினரும் உறுதியாக இருக்கிறார்கள்.

எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் சீமான் ஆகியோர் தனித்தனியே போட்டியிட்டாலும் மத்தியில் ஆளும் பா.ஜ.க.வை எதிர்ப்பதை விட தமிழகத்தில் ஆளும் தி.மு.க.வை எதிர்ப்பதற்கே தங்களுடைய முழு சக்தியையும் செலவழிக்கிறார்கள்.


இன்னொரு வகையில் எடப்பாடி பழனிசாமி இந்த தேர்தலில் மிகவும் புத்திசாலித்தனமாக வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறார். அதாவது அ.தி.மு.க.வின் மாஜி அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், முக்கிய வி.ஐ.பி.கள், முகம் அறிந்த பிரபலங்கள் எவரையும் வேட்பாளராக அவர் அறிவிக்கவில்லை. அதாவது முக்கிய நபர்களையும் அவர்களுடைய பணத்தையும் அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பயன்படுத்தினால் போதும் என்பதில் தெளிவாக இருக்கிறார்.

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து எடப்பாடி பழனிசாமி வெளியேறியது மூலம் தன்னை ஒரு தனிப்பெரும் தலைவராக காட்டிக் கொள்ள முடிந்திருக்கிறது. திருமாவளவனை தி.மு.க. கூட்டணியில் இருந்து பிரித்துக் கொண்டுவருவதற்கு எடப்பாடி பழனிசாமி எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியைத் தழுவியிருந்தாலும், தனித்தனியே நிற்பதன் மூலம் தன்னுடைய உண்மையான பலத்தை அறிந்துகொள்ளும் ஒரு பரீட்சையாகவே இந்த தேர்தலை எடப்பாடி பழனிசாமி எதிர்கொள்கிறார்.

கரணம் தப்பினால் மரணம் எனும் வகையில் ஸ்டாலின் பா.ஜ.க. அரசுக்கு எதிராக கடுமையாகப் போராடுகிறார். மீண்டும் பிரதமராக மோடி பிரதமர் பதவியில் அமரநேர்ந்தால் தி.மு.க.வுக்கு நிறையவே சிக்கல்கள் இருக்கும் என்பது தெரிந்தும் எதிர்த்து நிற்கிறார். தி.மு.க.வுடன் கூட்டணிக் கட்சிகள் உறுதியுடன் நிற்கிறார்கள். இந்த முறை கமல்ஹாசனும் ஸ்டாலின் பக்கம் வந்திருக்கிறார்.

மக்களும் ஸ்டாலினுடன் நிற்கிறார்களா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

ஆசிரியர்





# தமிழக தேர்தல் களரிப்போர்ட்

**2024** நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப் படையாக நான்கு அணிகள் தமிழகத் தில் மோதுகின்றன. ஆனால், பெரும்பாலான தொகுதிகளில் இரண்டு மாநிலக் கட்சிகளின் மோதலே பிரதானமாக இருக்கிறது. ஒருசில தொகுதிகளில் மட்டும் பா.ஜ.க. கூட்டணி கட்சி முட்டிப் பார்க்கிறது. நான்காவது அணியான நாம் தமிழர் வழக்கம் போல் களத்தில் நிற்கிறார்கள் என்று மட்டுமே சொல்ல வேண்டும்.

மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. கூட்டணியில் 22 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிடுகிறது. காங்கிரஸ் தமிழகத்தில் 9 தொகுதிகளிலும், புதுச்சேரியில் 1 தொகுதியிலும் போட்டியிடுகிறது. சி.பி.ஐ., சி.பி.எம்., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை தலா 2 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 1 தொகுதியிலும், ம.தி.மு.க. 1 தொகுதியிலும் போட்டியிடுகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சலசலப்பு ஏற்படுத்தி மக்கள் நீதி மய்யம் கட்சி இந்த தேர்தலில் தி.மு.க.வுக்கு வெளிப்படையாக ஆதரவு அளித்துள்ளது.

எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அணியில் விஜயகாந்த்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம், கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ. ஆகிய கட்சிகள் இணைந்து தேர்தலை எதிர்கொள்கின்றன. இந்த கூட்டணியில் அ.தி.மு.க. 32 தொகுதிகளிலும் பிரேமலதா 5 தொகுதிகளிலும், புதிய தமிழகம் மற்றும் எஸ்.டி.பி.ஐ. ஆகிய கட்சிகள் தலா 1 தொகுதியிலும் போட்டியிடுகின்றன.



மு.க.ஸ்டாலின்



எடப்பாடி பழனிசாமி



அண்ணாமலை



சீமான்

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் டாக்டர் ராமதாஸின் பா.ம.க., டிடிவி தினகரனின் அ.ம.மு.க., ஜி.கே.வாசனின் தமிழ் மாநில காங்கிரஸ், பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சி, ஏ.சி.சண்முகத்தின் புதிய நீதிக் கட்சி, ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், தேவநாதன் யாதவ்வின் இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம் ஆகியோருடன் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் இருக்கிறார்கள். இந்த கூட்டணியில் பா.ஜ.க. 19 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதோடு, இந்திய ஜனநாயக கட்சியின் பாரிவேந்தர், புதிய நீதி கட்சியின் ஏ.சி. சண்முகம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஜான் பாண்டியன், இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகத்தின் தேவநாதன் யாதவ் ஆகியோர் பா.ஜ.க.வின் தாமரைச் சின்னத்திலே போட்டியிடுகின்றனர். எனவே தமிழகத்தில் தாமரைச் சின்னம் 23 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

இந்தக் கூட்டணியில் இரண்டாவது பெரிய கட்சியான பா.ம.க. 10 தொகுதிகளிலும், த.மா.கா. 3 தொகுதிகளிலும், அ.ம.மு.க. 2 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. ஓ. பன்னீர் செல்வம் மட்டும் சுயேட்சையாக போட்டியிடுகிறார்.

நான்கு முனைப் போட்டி என்பதை காட்டும் வகையில் நாம் தமிழர் கட்சி அனைத்துத் தொகுதிகளிலும் தனித்துக் களம் காண்கிறது. இந்த தேர்தலில் நிச்சயம் ஜெயிக்க முடியாது என்பது நாம் தமிழர் கட்சியின் கடைசித் தம்பிக்கும் தெரியும் என்றாலும் அண்ணன் சீமான் ஆவேசமாக பிரசாரம் செய்துவருகிறார். வாக்கு வங்கியை குறிப்பிட்ட அளவு பெற்றுவிட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்.

தமிழகம் முழுவதுமுள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் ஐந்து பேர் என்று களத்தில் இறங்கி அங்குள்ள நிருபர்கள், அரசியல் ஆர்வலர்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோரின் கருத்துக்களைப் பெற்று இந்த கள நிலவரத்தைக் கொடுத்து இருக்கிறோம். வி.ஐ.பி.கள் களம் இறங்கும் தொகுதிகளை கொஞ்சம் விரிவாகவும் மற்ற தொகுதிகள் குறித்து மேலோட்டமாகவும் தகவல் வழங்கியிருக்கிறோம். தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, பா.ஜ.க. கூட்டணி தகவல்கள் மட்டுமே சேகரித்துள்ளோம். நாம் தமிழர் கட்சியின் வெற்றி வாய்ப்பு குறித்து கருத்து கேட்கப்படவில்லை. எனவே, தொகுதிகளில் மூன்று கூட்டணிகளின் நிலவரம் பற்றி மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாகவே தமிழக மக்கள் நாடாளுமன்றத் தேர்தலுக்கு பெரும்பான்மையாக ஒரே மாதிரி வாக்களிக்கும் தன்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த தேர்தலிலும் அப்படியே நடக்க வாய்ப்பு இருக்கிறது. படித்துப் பாருங்கள்... தேர்தலுக்குப் பிறகு நமது கணிப்புகள் சரி என்பதை நீங்களே அறிந்துகொள்வீர்கள்.

# கோவை

## மட்டன் பிரியாணி கமகமக்கிறது

மத்த தொகுதிகளில் எப்படியோ கோவையில் அண்ணாமலை கண்டிப்பாக வெற்றி அடைந்துவிடுவார், உளவுத் துறை கொடுத்த ரிப்போர்ட் அடிப்படையில்தான் அவர் கோவையில் நிற்கிறார் என்று இப்போதும் பா.ஜ.க.வினர் கோவை ஏரியாவில் பில்டப் கொடுத்துவருகிறார்கள். சமூகவலைதளங்களில் கம்பு சுற்றும் அளவுக்கு தொகுதிக்குள் பா.ஜ.கவினரை காண முடியவில்லை.

அதேநேரம், தி.மு.க. சார்பில் முன்னாள் மேயர் கணபதி ராஜ்குமாரும், அ.தி.மு.க.வின் ஐ.டி. விங் சிங்கை ராமச்சந்திரனும் தீவிரமாக ஓட்டு வேட்டையாடி வருகிறார்கள். இவர் ஓ.பி.எஸ். அணிக்கு சென்று திரும்பியவர். ஐ.டி. விங்க் மூலம் எடப்பாடியின் ஆதரவை பெற்றவர் என்பதால் வேலுமணி இவரை சீரியஸாக ஆதரிப்பதாகத் தெரியவில்லை. இவர் நாயுடு சமூகம் என்பதால் கொங்கு பகுதியில் செல்வாக்கு குறைவு.

இங்கு பா.ஜ.க.வுக்கு ஓரளவு வாக்கு வங்கி இருப்பதை நம்பியே அண்ணாமலை களத்தில் நிற்கிறார். அண்ணாமலைக்கு ஆதரவாக வானதி சீனிவாசன் கூட முழு நேரமும் களத்தில் இல்லை. அண்ணாமலையும் முழு நேரமும் கோவையில் பிரசாரம் செய்யாமல் மற்ற வேட்பாளர்களுக்கு பிரசாரம் செய்துவருகிறார்.

அதேநேரம், தி.மு.க. மிகத் தீவிரமாக களப்பணியாற்றி வருகிறது. தொழிலாளர்கள் நிறைந்த தொகுதி என்பதால் தி.மு.க. கூட்டணிக் கட்சியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியினர் தீவிரமாக உழைத்து வருகிறார்கள். இப்போது செந்தில் பாலாஜியின் கரூர் டீமும் களம் இறங்கியிருப்பதால் தி.மு.க.வினர் படு வேகமெடுக்கிறார்கள். பணம் பாதாளம் வரை பாயும்.

கோவை தெற்கு, கோவைபவடக்கு, சிங்காநல்லூர், கவுண்டம்பாளையம், சூலூர், பல்லடம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளும் அ.தி.மு.க. வசம் இருப்பதால் எப்படியும் இந்த தொகுதியை தட்டித் தூக்கிவிடலாம் என்று நினைக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

ஆனால், செந்தில் பாலாஜி கொங்கு பகுதியை கண்ட்ரோலுக்கு எடுத்ததும் நிலைமை மாறிவிட்டது என்கிறார்கள். அதோடு இப்போது செந்தில் பாலாஜி டிக் செய்த நபரே வேட்பாளர் என்பதால் செந்தில் பாலாஜியின் பெயரைக் காப்பாற்றுவதற்காக அவரது ஆட்கள் கடுமையாக உழைக்கவும், பணம் செலவழிக்கவும் செய்கிறார்கள்.

இந்த தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமையவில்லை, மின்சார சலுகை தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கவில்லை, ஜி.எஸ்.டி. வரி குறைப்புக்கு எதுவும் செய்ய முடியவில்லை என்றெல்லாம் புகார்கள் இருந்தாலும் எதுவும் தி.மு.க.வுக்கு பாதிப்பு ஏற்படுத்தவில்லை.

கடந்த பத்து ஆண்டுகளாக, பல ஆயிரம் கோடி ரூபாய் நிதி, கோவையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு வழங்கியும், மத்திய அரசின் திட்டங்களை முறையாகச் செயல்படுத்தாத பாராளுமன்ற உறுப்பினரால், கோவையின் வளர்ச்சி தேங்கி நிற்கிறது என்று அண்ணாமலை குற்றம் சாட்டி வருகிறார். கோவையில் பா.ஜ.க.வுக்கு என்று குறிப்பிட்ட அளவுக்கு வாக்கு வங்கி இருக்கிறது என்றாலும் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையிலே கடும் போட்டி நிலவுகிறது. அண்ணாமலைக்கு டெபாசிட் கிடைக்கும் என்று மட்டும் சொல்லலாம்.



கடுமையாக வாக்குகள் பிரிவதால் அமைதியாக வெற்றி வாகை சூடுகிறார் கணபதி.

பஞ்ச் : உதயசூரியன் ஜொலிஜொலிக்கிறது.





# தென்காசி

## ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

தி.மு.க.வின் சிட்டிங் எம்.பி.யான தனுஷ் எம்.குமாருக்குத்தான் மீண்டும் வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்த்த நிலையில், ராணி ஸ்ரீகுமார் என்ற புதுமுகத்துக்கு லக் அடித்துள்ளது. தனுஷ் நிற்கவில்லை என்பதால், சிட்டிங் எம்.பி. எதுவுமே செய்யவில்லை என்ற குறை எழவே இல்லை.

சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் மயக்கவியல் நிபுணராகப் பணியாற்றி வரும் ராணி முதன்முறையாக தேர்தலில் போட்டியிடுகிறார். கனிமொழி ஆதரவாளர் என்ற ஒரே தகுதியில் சீட் வாங்கியிருக்கிறார். இவரது பெரியப்பா. துரைராஜ், சங்கரன்கோவில் தொகுதியிலிருந்து ஏற்கெனவே இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

அ.தி.மு.க. கூட்டணி சார்பில் புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி களம் இறங்கியிருக்கிறார். பா.ஜ.க. கூட்டணியில் இந்த தொகுதியை ஜான் பாண்டியனுக்கு தரப்போகிறார்கள் என்பது தெரிந்த காரணத்தால், கடைசி நேரத்தில் அ.தி.மு.க. கூட்டணிக்குத் தாவியவர். எடப்பாடி பழனிசாமி பெருந்தன்மையுடன் சீட் கொடுத்திருக்கிறார்.

இந்த தொகுதியிலுள்ள ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், கடையநல்லூர், தென்காசி ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் நான்கு தி.மு.க. கூட்டணிக்கும் இரண்டு அ.தி.மு.க. வசமும் உள்ளன. எனவே, ஏரியாவில் தி.மு.க. கூட்டணியினர் ஆதிக்கம் அதிகமாகவே உள்ளது.

டாக்டர் கிருஷ்ணசாமி 1998 முதல் தென்காசி மக்களவைத் தொகுதியில் தொடர்ந்து போட்டியிட்டு வருகிறார் என்றாலும் ஒருமுறை கூட வெற்றி பெறவில்லை. கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் அதிமுக அணியில் போட்டியிட்டு 3,55,389 வாக்குகளும் 2014 தேர்தலில் திமுக அணியில் போட்டியிட்டு 2,62,812 வாக்குகள் பெற்றவர்.

தேவேந்திரகுல வேளாளர்கள் தென்காசி தொகுதியில் கணிசமாக உள்ளனர். அந்த சமூக வாக்குகளை குறிவைத்து ஜான் பாண்டியனை பா.ஜ.க. களமிறக்கியுள்ளது. அ.ம.மு.க.வுக்கு கணிசமான வாக்குகள் உள்ளன. அதேசமயம் அ.தி.மு.க. அணி சார்பாக போட்டியிடும் கிருஷ்ணசாமியும் அந்த சமூக வாக்குகளை பங்கு போடுவார். ஆக, இந்த சமுதாய ஓட்டுகள் இரண்டு பக்கமும் விழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.



இந்த தொகுதியில் ம.தி.மு.க.வுக்கு ஓரளவு நல்ல செல்வாக்கு இருக்கிறது. இங்கு பா.ஜ.க.வுக்கு தனிப்பட்ட செல்வாக்கு எதுவும் இல்லை. எனவே கூட்டணி பலத்தினால் ராணி வெற்றி பெறுகிறார். கிருஷ்ணசாமியும் ஜான் பாண்டியனும் ஒருவர் காலை ஒருவர் வாரி தோல்வியைத் தழுவுகிறார்கள்.

பஞ்ச் : சூரியனுக்கு அட்டகாச வெற்றி

# திருச்சி

## தீப்பெட்டிக்கு முட்டுக் கொடுக்கும் சூரியன்

திருச்சி தொகுதியில் தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. சார்பில் வைகோவின் மகன் துரை வைகோ தீப்பெட்டி சின்னத்தில் நிற்கிறார். அவரை எதிர்த்து அ.தி.மு.க.வில் - கருப்பையா பன்னீர் செல்வமும் பா.ஜ.க. கூட்டணி சார்பில் அ.ம.மு.க.வின் செந்தில்நாதனும் போட்டியிடுகிறார்கள்.

வாரிசு அரசியலுக்கு எதிராக களம் இறங்கிய ம.தி.மு.க.வில் வாரிசு அரசியலா என்று அவரது கட்சியின் மூத்த நிர்வாகிகள் கொஞ்சம் கடுப்பில் இருக்கிறார்கள். கணேசமூர்த்தியின் மரணம் வைகோ தொண்டர்களை எரிச்சல் அடைய வைத்திருக்கிறது. எனவே உதயசூரியன் சின்னத்தில் நின்றால் 100 சதவிகிதம் வெற்றி உறுதி என்று நேரு அழுத்தி அழுத்திச் சொன்ன பிறகும் பம்பரம் என்பதில் வைகோ உறுதியாக இருந்தார். ஆனால், தேர்தல் கமிஷன் பஞ்சாயத்தால் பம்பரம் கிடைக்காமல் இப்போது தீப்பெட்டி சின்னத்தில் நிற்கிறார். இந்த புதிய சின்னத்தைக் கொண்டுசேர்க்க சிரமம் இருப்பதாக திருச்சி தி.மு.க.வினர் தடுமாறுகிறார்கள்.


சிட்டிங் எம்.பி.யான திருநாவுக்கரசர் மீது மக்களுக்கு மதிப்பு குறைந்துபோனதை கணக்கிட்டே தொகுதி ம.தி.மு.க.வுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் காங்கிரஸார் அதிருப்தியில் இருப்பதைக் காண முடிகிறது.

ஆனால் திருச்சி நாடாளுமன்ற தொகுதிக்குள் திருவரங்கம், திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு, திருவெறும்பூர் மற்றும் புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் எல்லாமே தி.மு.க. கூட்டணியின் கையிலே உள்ளதால், துரையை ஜெயிக்க வைக்கவேண்டிய கட்டாயத்துக்கு தி.மு.க. நிர்வாகிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

திருச்சி ஏரியாவில்; முத்திரையர், வெள்ளாளர், முக்குலத்தோர், பட்டியல் சமூகத்தினர், நாயுடு, இஸ்லாமியர்கள் நிரம்பியுள்ளனர். இவர்களில் துரை வைகோ மற்றும் கருப்பசாமி ஆகிய இருவருமே வேறு தொகுதியைச் சேர்ந்தவர்கள் எனும்போது கருப்பையா மட்டும் பெரும்பான்மை சமூகத்தவர். ஆகவே, அந்த ஓட்டு விழும் என்ற நம்பிக்கையில் கருப்பையா இருக்கிறார்.

மாஜி அமைச்சர் விஜயபாஸ்கர் இந்த தொகுதியில் குறிப்பிட்ட வாக்குகள் அ.தி.மு.க.வுக்கு வாங்கித் தருவதாக எடப்பாடி பழனிசாமிக்கு உறுதி அளித்திருக்கிறாராம். வேட்பாளரை தேர்வு செய்ததும் அவர் தான். ஆகவே, பணம் கொஞ்சம் விளையாடுறது. இதனால் ஓரளவு வாக்குகள் வாங்கலாமே தவிர, வெற்றிக்கு சாத்தியம் இல்லை.

அதேநேரம், திருச்சியில் பா.ஜ.க.வுக்கும் பா.ம.க.வுக்கும் செல்வாக்கு கிடையாது. அ.மமு.க.வினர் வாக்குகள் மட்டுமே சொல்லிக்கொள்ளும் அளவுக்கு உள்ளது. கடந்த 2019 தேர்தலில் திருநாவுக்கரசர் 6.21 லட்சம் வாக்குகள் பெற்றார். தே.மு.தி.க வேட்பாளர் இளங்கோவன் 1.62 லட்சம் வாக்குகள் மட்டுமே பெற்றார். அ.ம.முக.வின் சாருபாலா தொண்டைமான் 1 லட்சம் வாக்குகளும் நாம் தமிழர் கட்சி 65 ஆயிரம் வாக்குகளும் மக்கள் நீதி மய்யம் 42 ஆயிரம் வாக்குகளும் பெற்றன.



இங்கு துரைவைகோவை வெற்றி பெற வைக்க வேண்டிய கடமை அமைச்சர் நேருக்கும் அன்பில் மகேஸ்க்கும் இருக்கிறது. ஆகவே, நிர்வாகிகளும் பணமும் நிறையவே களம் இறங்கியிருக்கிறது. இதனால் தீப்பெட்டி, கணேசமூர்த்தி போன்ற இடையூறுகளைத் தாண்டி பெரும்பான்மை வாக்குகளுடன் வெல்கிறார் துரை வைகோ.

பஞ்ச் : தீப்பெட்டி பத்திக்கிச்சு





# மதுரை

## சர்வகட்சி சரவணன் கண்ணுக்குத் தெரியலையே

மதுரை தொகுதியில் சிட்டிங் எம்.பி.யான மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சு.வெங்கடேசன் மீண்டும் களத்தில் இருக்கிறார். இவரை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் புதிதாக கட்சியில் இணைந்த டாக்டர் சரவணனும் பா.ஜ.க.வில் ராம சீனிவாசனும் போட்டியிடுகிறார்கள்.

மதுரை வடக்கு, மதுரை மேற்கு, மதுரை மத்தி, மதுரை கிழக்கு, மதுரை தெற்கு மற்றும் மேலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் அடங்கிய மதுரை நாடாளுமன்றத்தில் மதுரை மேற்கில் செல்லூர் ராஜூவும் மேலூரில் செல்வமும் மட்டுமே அ.தி.மு.க.. மற்ற அனைத்தும் தி.மு.க.வினர் கையில் உள்ளது வெங்கடேசனுக்கு சாதகம்.

இந்த தொகுதியில் முக்குலத்தோர், யாதவர்கள், நாயக்கர், சவுராஷ்ட்ரா சமூக வாக்குகள் கணிசமாக இருந்தாலும் ஜாதி ஓட்டுக்கள் இங்கு யாருக்கும் ஒட்டுமொத்தமாக விழப் போவதில்லை.

கடந்த 2019 தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் நின்ற சு.வெங்கடேசன் 4.47 லட்சம் வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட ராஜன் செல்லப்பாவின் மகன் ராஜ் சத்யன் 3.07 லட்சம் வாக்குகளும் பெற்றனர். மக்கள் நீதி மய்யத்தின் அழகர் 85 ஆயிரம் வாக்குகளும் நாம் தமிழர் பாண்டியம்மாள் 42 ஆயிரம் வாக்குகளும் பெற்றனர்.

அ.தி.மு.க.வில் ராஜன் செல்லப்பாவின் மகன் ராஜ் சத்யனுக்கு வாய்ப்பளிக்க தலைமை விரும்பினாலும், அவர் நிற்க ஆசைப்படவில்லை. கள நிலவரத்தைக் கண்டு பயந்து அவரே சரவணனை முன்னிறுத்தினார் என்பதிலிருந்தே அ.தி.மு.க.வின் வெற்றி வாய்ப்பை அறிந்துகொள்ளலாம்.

செல்லூர் ராஜூ, ஆர்.பி.உதயகுமார், ராஜன் செல்லப்பா போன்றவர்கள் பணம் செலவழிக்காமல் வேடிக்கை பார்க்கிறார்கள். சரவணனிடம் பணம் இருக்கிறது என்பதும் நன்றாக செலவழிக்கக்கூடியவர் என்பதாலுமே சீட் கொடுக்கப்பட்டுள்ளது.

மூடியைத் திறக்காமல் பைனாகுலர் வழியே வெங்கடேசனை தேடுவதாக பொதுமேடையில் பேசி எல்லோருடைய கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளாகியிருக்கிறார். ஆனால், வெற்றிக்கான தேடுதலில் சரவணன் யாருடைய கண்ணுக்கும் தென்படவில்லை.

பா.ஜ.க.வின் சீனிவாசனுக்கும் மதுரைக்கும் எந்த தொடர்பும் இல்லை. அவர் விருதுநகரை எதிர்பார்த்து காய் நகர்த்தி வந்தார். ஆனால், விருதுநகர் புதிதாக கட்சிக்கு வந்த ராதிகாவுக்குப் போய்விட்டதால் சீனிவாசன் ஏமாந்துவிட்டார். சீனிவாசன் பணம் வைத்திருந்தாலும் செலவழிக்க மாட்டார். எனவே சீனிவாசன் டெபாசிட் வாங்குவதற்கு டிடிவி தினகரன், பன்னீரின் சமுதாய வாக்குகள் கிடைத்தால் மட்டுமே நடக்கும். அமித்ஷா மதுரைக்கு வந்து ரோடு ஷோ போனாலும் சீனிவாசனுக்கு டெபாசிட் கிடைப்பது கஷ்டம்.



சு.வெங்கடேசன் எளிதில் அணுகக்கூடிய நபர், எல்லா பிரச்னைகளுக்கும் குரல் கொடுப்பவர், மதுரைக்கு நிறைய செய்திருக்கிறார் என்ற எண்ணம் மக்களிடம் உள்ளது. மாணவர்கள், தொழிலாளர்களிடம் நல்ல பெயர் இருப்பதால் இரண்டு டம்மி வேட்பாளர்களைத் தாண்டி கடந்த தேர்தலை விட அதிக வித்தியாசத்தில் வெங்கடேசன் ஜெயிக்கிறார்.

பஞ்ச் : எதிரிகளுக்கு சுத்தியல் அடி

## ஈரோடு

# உதயநிதியின் நண்பனுக்கு செம ஃபைட்

தமிழகத்தில் அ.தி.முக.வுக்கு ஓரளவு நம்பிக்கை தரும் தொகுதிகளில் ஈரோடு முதலிடத்தில் இருக்கிறது. ஏனென்றால், பொதுவாகவே இந்த தொகுதி அ.தி.மு.க.வுக்கு ஆதரவானது. எனவே பெரும் செல்வம் வைத்திருக்கும் ஆற்றல் அசோக்குமாரை அ.தி.மு.க. வேட்பாளராக நிறுத்தியிருக்கிறது. அதேநேரம், பா.ஜ.க. சார்பில் டம்மி வேட்பாளராக கூட்டணிக் கட்சியான தமிழ் மாநிலக் காங்கிரஸில் விஜயகுமார் நிற்கிறார். இவர்களை எதிர்த்து கடுமையாக களமாடுவது உதயநிதியின் நம்பிக்கை நட்சத்திரமான கே.இ.பிரகாஷ்.

ஈரோடு இளைஞரணி மாவட்ட அமைப்பாளராகப் பணியாற்றிய பிரகாஷ் மீது உதயநிதியின் பார்வை பட்டதுமே அவர் இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த தேர்தலில் இளைஞர் அணி சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் ஒரே வேட்பாளர் பிரகாஷ் மட்டுமே. எனவே இவரை ஜெயிக்க வைக்கவேண்டிய பொறுப்பும் அவசியமும் அமைச்சர்கள் முத்துச்சாமிக்கும் சாமிநாதனுக்கும் உள்ளதால் கடுமையாக வேலை செய்கிறார்கள்.

ஈரோடு தொகுதி முன்பு திருச்செங்கோடாக இருந்தபோது, அ.தி.மு.க.வின் எம்.பி.யாக இருந்த கே.எஸ்.சவுந்திரத்தின் மகனே ஆற்றல் அசோக்குமார். அதேபோல் அசோக்குமாரின் மாமியார் மொடக்குறிச்சி பா.ஜ.க. எம்.எல்.ஏ. சரஸ்வதி. எனவே இவருக்கு பா.ஜ.க. மறைமுகமாக வேலை பார்ப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. இந்த தொகுதியைக் குறிவைத்து கடந்த இரண்டு ஆண்டுகளாகவே மருத்துவ முகாம், கோயில் புனரமைப்பு,10 ரூபாய்க்கு உணவு போன்ற பல பணிகள் செய்துவருகிறார்.

முன்னாள் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான கே.வி.ராமலிங்கம், அமைச்சர் தங்கமணி போன்றவர்கள் அசோக்குமாருக்கு ஆதரவாக நிற்கிறார்கள். தோல்வி பயத்தில் இவர்கள் யாரும் சீட்டு கேட்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது. அ.தி.மு.க.வின் ஆற்றல் அசோக்குமார் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக எம்.பி. சீட் வாங்கிவிட வேண்டும் என்ற முயற்சியில் நிறையவே நலத்திட்ட உதவிகள் செய்துவந்தார். பா.ஜ.க.வில் வாய்ப்பு இல்லை என்று தெரியவந்ததும் அ.தி.மு.க.வுக்கு வந்திருக்கிறார். மக்கள் அறிமுகம் உள்ளது. பணபலம் உள்ளது. எடப்பாடியின் முழு ஆதரவும் மாஜி அமைச்சர் தங்கமணியின் பக்கபலம் இருந்தாலும் தொண்டர்களிடம் அத்தனை எழுச்சி இல்லை. ஆனால், பணம் இறக்கப்பட்டதும் அ.தி.மு.க.வினர் கூடுதல் உற்சாகத்துடன் பணியாற்றலாம்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியில் விடியல் சேகர் அல்லது யுவராஜா நின்றிருந்தால் கணிசமான வாக்குகள் வாங்கியிருக்கலாம். விஜயகுமாருக்கு செல்வாக்கு குறைவு என்பதால் இவர் போட்டியிலே இல்லை. ஈரோடு தொகுதியில் குமாரபாளையம் (மாஜி அமைச்சர் தங்கமணி) ஈரோடு கிழக்கு - இ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஈரோடு மேற்கு - அமைச்சர் முத்துசாமி, மொடக்குறிச்சி - பா.ஜக. சரஸ்வதி, தாராபுரம் என்.கயல்விழி, காங்கேயம் - அமைச்சர் சாமிநாதன் இரண்டு தொகுதியில் மட்டுமே எதிர்க்கட்சியினர் என்றாலும் நல்ல போட்டி தரக்கூடியவர்கள்.



இந்த தொகுதியில் கொங்கு வேளாள கவுண்டர்கள், வன்னியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாகவும் நாயக்கர், செட்டியார், முதலியார் வாக்கு கள் கணிசமான அளவிலும் உள்ளனர். கணேசமூர்த்தியின் மரணம் தி.மு.க. வுக்கு ஒரு பின்னடைவாக இருக்கிறது. இத்தனை பிரச்னைகள் இருந்தாலும் கடுமையாக போட்டி நிலவினாலும் கூட்டணி ஆதரவுடன் இப்போதைக்கு பிரகாஷ் வெற்றிக் கோட்டுக்கு அருகில் நிற்கிறார். பிரகாஷ் வெற்றிக்குத் தேவையான உற்சாக டானிக் இப்போதே ஏரியாவுக்குள் இறங்கிவருகிறதாம்.

பஞ்ச் : சபாஷ்... சரியான போட்டி.





## சிவகங்கை

# கார்த்தி சிதம்பரத்தின் தேர்தல் நாடகம்

தி.மு.க.வினருக்கு பிடிக்கவே பிடிக்காத கார்த்தி சிதம்பரம் மீண்டும் வேட்பாளராக சிவகங்கை தொகுதியில் களம் இறங்கியிருக்கிறார். இவரை வேட்பாளராக போடக்கூடாது என்று கே.ஆர்.ராமசாமி, சுதர்சன நாச்சியப்பன் உள்ளிட்ட பல காங்கிரஸ் தலைவர்களும், தி.மு.க. தலைவர்களும் டெல்லிக்குப் படையெடுத்தார்கள். அத்தனை பேர் முகத்திலும் கரி பூசிவிட்டு மீண்டும் வேட்பாளராகிவிட்டார் கார்த்தி சிதம்பரம்.

அ.தி.மு.க. சார்பில் சேவியர்தாஸ், பா.ஜ.க. கூட்டணியில் இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் தேவநாதன் ஆகியோர் போட்டியிடுகிறார்கள். அ.தி.மு.க.வின் சேவியர் தாஸ் தேர்தல் அரசியலுக்கு ரொம்பவே புதுசு. அவருக்கு ஜாதி வாக்குகளும் இரட்டை இலையும் மட்டுமே சாதகம். தாமரை சின்னத்தில் போட்டியிடும் தேவநாதன் மீது திடீரென எழுந்திருக்கும் சிட்பண்ட் மோசடி குற்றச்சாட்டு கடுமையான பாதிப்பை உண்டாக்குகிறது.

சிவகங்கை நாடாளுமன்ற தொகுதியில் முக்குலத்தோர், ஆதிதிராவிடர், யாதவர், நகரத்தார், வல்லம்பர், முத்தரையர், நாடார், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் பரவலாக உள்ளனர். பா.ஜ.க., அ.ம.மு.க.வுக்கு ஓரளவுக்கு வாக்கு வங்கி உள்ளது.

ஒரு வகையில் சொல்லப்போனால் இந்த தொகுதியில் மூன்று வேட்பாளர்களுமே தொகுதி மக்களுக்கு வேண்டாத வேட்பாளர்கள். வேண்டாதவர்களில் யாரை தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதில் தான் போட்டியே இருக்கிறது.

கார்த்தி சிதம்பரம் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் அவரது ஸ்டைல் அப்படியே மாறிவிட்டது. காங்கிரஸ்காரர்கள் தன்னை தோற்கடித்துவிடுவார்கள் என்ற எண்ணத்தில் முழு தி.மு.க.காரனாக வேடம் போட்டு மாறிவிட்டார். ஒரு தி.மு.க. தொண்டனை விட அதிகமாக ஸ்டாலினையும் தி.மு.க. ஆட்சியையும் பாராட்டிப் பேசுகிறார். பா.ஜ.க.வை அடித்து துவைத்து எடுக்கிறார். ஆகவே, இப்போது தி.மு.க.வினர் இப்போது கார்த்தி சிதம்பரத்தை ரொம்பவே பாராட்டத் தொடங்கிவிட்டனர்.

கார்த்தி சிதம்பரமும் ஒவ்வொரு பிரச்சார முனைக் கூட்டத்திலும் திமுக அரசின் மக்கள் நலதிட்டங்களை வாக்காளர்களுக்கு புரியும் வகையில் தி.மு.க. நிர்வாகிகளை விட எளிமையாக வலிமையாக பிரச்சாரம் செய்கிறார். 2014 தேர்தலில் தனித்து நின்று 25 சதவிகித வாக்குகளை தி.மு..கவும், 10 சதவிகித வாக்குகளை காங்கிரஸ் கட்சியும் இங்கு பெற்றன. கடந்த 2019 தேர்தலில் திமுக கூட்டணி வேட்பாளர் கார்த்தி சிதம்பரம் மட்டுமே 52% வாக்குகள் பெற்றுள்ளார்.

கடந்த தேர்தலில் ஹெச். ராஜா 20 சதவிகித வாக்குகளையும் அ.ம.மு.க. 12 சதவிகித வாக்குகளும் பெற்றன. ஆகவே, இந்த தேர்தலில் கார்த்தி சிதம்பரத்துக்கு சரியான போட்டி இல்லாத காரணத்தால் எளிதாக எம்.பி. ஆகிறார் கார்த்தி.



பதவி கிடைத்த பிறகு கார்த்தி மீண்டும் செல்போனில் சினிமா பார்க்கவும், புதிர் விளையாடவும் செய்யத் தொடங்கிவிடுவார். தி.மு.க.வினர் உழைத்தது வீணாகிவிடும் என்பதுதான் பரிதாபம். இந்த தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளரைத் தாண்டி நாம் தமிழர் அதிக வாக்குகள் வாங்குவதற்கு வாய்ப்புகள் உண்டு.

பஞ்ச் : கார்த்தி எனும் மச்சக்காரன்

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

மத்திய சென்னை

# மாறனுடன் மல்லுக்கட்டும் வினோஜ்

மத்திய சென்னையின் தி.மு.க. வேட்பாளர் யார் என்று சின்னக் குழந்தையைக் கேட்டாலும் சொல்லும் என்பது போல் மாறவே மாறாமல் மீண்டும் தயாநிதி மாறன் நிற்கிறார். அவருக்குப் போட்டி இருக்கக்கூடாது என்றோ என்னவோ, இந்த தொகுதியை தே.மு.தி.க.வுக்குக் கொடுத்துவிட்டார் எடப்பாடி பழனிசாமி. ஆகவே, தே.மு.தி.க. சார்பில் பார்த்தசாரதி நிற்கிறார். ஆனால், இவர்கள் இருவரையும் விட அதிகமாக ஏரியாவில் சலசலப்பு காட்டுகிறார் பா.ஜ.க.வின் வேட்பாளர் வினோஜ் செல்வம்.

இங்கு முரசொலி மாறன் 1996, 1998, 1999 ஆகிய 3 தேர்தல்களில் நின்று வெற்றி பெற்றுள்ளார். அதேபோல் தயாநிதி மாறன் 204, 2009 தேர்தல்களில் வென்று 2014 தேர்தலில் தோற்றார். அடுத்த 2019 தேர்தலில் வென்று தற்போது நான்காவது முறையாக களத்தில் நிற்கிறார்.

2019 தேர்தலில் பா.ம.க சார்பில் நிறுத்தப்பட்ட சாம் பவுலை சுமார் 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தயாநிதி மாறன் வென்றார். மக்கள் நீதி மய்யம் சார்பில் நின்ற கமீலா நாசர் 92 ஆயிரம் வாக்குகளும் நாம் தமிழர் வேட்பாளர் 30 ஆயிரம் வாக்குகளும் பெற்றனர். எல்லோருமே டெபாசிட் பறி கொடுத்தனர்.

இது தி.மு.க.வின் கோட்டை. என்றே சொல்லலாம். ஏனென்றால் இந்த தொகுதிக்குள் வரும் வில்லிவாக்கம், எழும்பூர், துறைமுகம், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி, அண்ணாநகர், ஆயிரம் விளக்கு ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க.வினரே எம்.எல்.ஏ.க்களாக இருக்கிறார்கள். அதோடு இஸ்லாமிய வாக்குகள் இந்த தொகுதியில் அதிகம்.

மார்வாடிகள், வெளி மாநிலத்தவர்கள் அதிகம் நிரம்பியிருக்கிறார்கள் என்பது மட்டுமே வினோஜ் செல்வத்துக்கு ஆறுதலான ஒரு செய்தி. அதோடு இவருக்கு ஆதரவாக பா.ஜ.க. முக்கியப் புள்ளிகள் வந்து செல்கிறார்கள். வீடு வீடாக நோட்டீஸ் வழங்குகிறார்கள். அபார்ட்மென்ட், பார்க் என பொது இடங்களில் கவனம் செலுத்தி வாக்கு சேகரிக்கிறார் வினோஜ். இந்த நாடாளுமன்றத் தொகுதிக்குள் வரும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட அனுபவம் மனோஜுக்கு இருக்கிறது. வட மாநிலத்தவர் மற்றும் இந்து மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் குறி வைத்து கடுமையாக உழைத்துவருகிறார். இரண்டாவது இடத்துக்கு வினோஜ் வருவதற்கு உழைக்கிறார்.

தே.மு.தி.க. வேட்பாளர் நிலைமை பரிதாபமாகவே உள்ளது. அ.தி.மு.க. வின் முன்னாள் அமைச்சர் பெஞ்சமின், பா.வளர்மதி, ஜே.சி.டி. பிரபாகரன் ஆகியோர் தே.மு.தி.க.வுக்கு வாக்கு சேகரிப்பில் இது வரை பெரிதாக அக்கறை காட்டவில்லை. வேட்பாளர் பார்த்தசாரதி பணம் செலவழிக்க மாட்டார். அ.தி.மு.க.வினரும் இவருக்காக பணம் கொடுக்கப்போவதில்லை.



எனவே இந்த தொகுதியிலுள்ள அ.தி.மு.க. வாக்குகள் தே.மு.தி.க.வுக்கு மாறும் எந்த வகையில் மாஜி அமைச்சர்கள் களப்பணியில் இறங்கவில்லை. வினோஜ் செல்வம் பெய்டு புரமோஷன் மூலம் சமூகவலைதளங்களிலும், மீடியாக்களிலும் அதிகம் அடிபடுகிறார். மாறன் அளவுக்கு வினோஜால் பணம் கொடுக்க முடியாது என்றாலும் கடுமையாகப் போட்டி போடுகிறார். ஆனாலும், மாறனுக்கே வெற்றி காத்திருக்கிறது.

பஞ்ச் : ஜெயிச்சுட்டே மாறா



40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

தென் சென்னை

# தமிழச்சியை ஜெயிக்க வைக்கும் தமிழிசை

மீண்டும் தி.மு.க.வில் தமிழச்சி தங்கப்பாண்டியனும் அவரை எதிர்த்து அ.தி.மு.க.வில் மாஜி அமைச்சர் ஜெயகுமாரின் மகன் ஜெயவர்தனும் நிற்கிறார்கள். கடந்த தேர்தலில் கனிமொழியிடம் கன்னாபின்னாவென்று தோல்வி அடைந்து கவர்னர் பதவி வாங்கிய தமிழிசை சௌந்தர்ராஜன், இங்கு பா.ஜ.க. வேட்பாளராக வந்து நிற்கிறார்.

இந்த தொகுதிக்குள் வரும் விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தி.நகர், மைலாப்பூர், வேளச்சேரி, சோழிங்கநல்லூர் என அத்தனையும் தி.மு.க. கூட்டணி வசம் உள்ளதால், இந்த தொகுதியும் தி.மு.க.வின் கோட்டை என்று அடித்துச் சொல்லலாம்.

வெளிமாவட்ட மக்கள் நிரம்பிய வணிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த தொகுதியில் திருவான்மியூர், சோழிங்கநல்லூர், வேளச்சேரி ஆகிய இடங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகம். பெருங்குடி குப்பை மேடு பிரச்னை தீரவே இல்லை. அதோடு தமிழச்சி தங்கப்பாண்டியனால் முழு வேகமாக பிரசாரம் செய்ய இயல முடியாமல் கால் வலியால் அவதிப்படுகிறார். கால் வலியையும் அனுதாப ஓட்டாக மாற்றும் முயற்சியில் இருக்கிறார்.

இங்கு 1996, 1998, 1999, 2004 ஆகிய தேர்தல்களில் தி.மு.க வேட்பாளர் டி.ஆர்.பாலு வெற்றி பெற்றுள்ளார். 2009, 2014 தேர்தல்களில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. 2019 தேர்தலில் சுமார் 2.5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயவர்த்தனை தமிழச்சி தங்கபாண்டியன் தோற்கடித்தார். மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட்ட ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி ரங்கராஜன் 1.35 லட்சம் வாக்குகளைப் பெற்றார். நாம் தமிழர் கட்சி 50 ஆயிரம் வாக்குகளை பெற்றன.

அ.தி.மு.க.வில் ஜெயக்குமார் மட்டுமே மகனுக்காக களத்தில் முழுமூச்சில் ஈடுபடுகிறார். மற்ற மாவட்டச் செயலாளர்களான ஆதிராஜாராம், தி.நகர் சத்யா, விருகை ரவி போன்றவர்கள் பெரிதாக உழைக்கவில்லை. எனவே, பாரம்பரிய இரட்டை இலை சின்னமே ஜெயவர்தனுக்கு ஓரளவுக்கு வாக்குகள் தரும்.

தமிழிசை சௌந்தர்ராஜனுக்கு பல்வேறு பா.ஜ.க. தலைவர்கள், வி.ஐ.பி.கள் பரப்புரை மேற்கொள்கிறார்கள். அனைவருக்கும் அறிந்த முகம் என்றாலும் முன்னேற்பாடுகள் எதுவும் செய்யாமல் களத்தில் நிற்கிறார். கூட்டணிக் கட்சிகளான பா.ம.க., தினகரன், பன்னீர் மூலமாக இவருக்கு வாக்குகள் கிடைக்கப்போவதில்லை. இந்த தொகுதியில் இருக்கும் பா.ஜ.க. ஓட்டுக்களை இவர் பிரித்துக்கொள்வார் என்பதால், சிரமம் இல்லாமல் வெற்றிக் கொடி கட்டுகிறார் தமிழச்சி தங்கப்பாண்டியன்.



பஞ்ச் : அனுதாப அலையில் தமிழச்சி

# வட சென்னை

## அதிருப்தி இருந்தாலும் வேற ஆளு இல்லையே

ஜமீந்தார் கட்சி என்று சொல்வதை நிரூபிப்பது போலவே மீண்டும் கலாநிதி வீராசாமிக்கு தி.மு.க.வில் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. சார்பில் ராயபுரம் மனோவும் பா.ஜ.க. சார்பில் பால் கனகராஜும் களத்தில் நிற்கிறார்கள்.

இந்த தொகுதியிலுள்ள ராயபுரம், ஆர்.கே.நகர், திருவொற்றியூர், பெரம்பூர், கொளத்தூர், திரு.வி.க.நகர் ஆகிய அத்தனையும் தி.மு.க. வசம் என்பது கலாநிதிக்கு மிகப்பெரிய பிளஸ் பாயிண்ட். இவர் தொகுதிக்கு எதுவுமே செய்யவில்லை என்ற அதிருப்தி பலமாக இருக்கிறது.


இந்த தொகுதியில் மீனவர்கள், தலித்துகள், வன்னியர்கள், நாடார்கள், முதலியார்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அதிகம். அதேபோல் ராஜஸ்தான் மாநிலத்தவர்களும் வட இந்தியர்களும் அதிகம் வசிக்கிறார்கள். இவர்களை நம்பியே பால் கனகராஜ் இங்கு தீவிரமாக ஓட்டு வேட்டை நடத்துகிறார்.

கடந்த தேர்தலில் கலாநிதி வீராசாமி தே.மு.தி.க. வேட்பாளரான அழகாபுரம் ஆர். மோகன்ராஜை 4.60 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். மக்கள் நீதி மய்யத்தின் மௌரியா 1 லட்சம் வாக்குகளும் நாம் தமிழர் காளியம்மாள் 60 ஆயிரம் வாக்குகளும் பெற்றனர்.

இந்த தொகுதியில் ராயபுரம் மனோவுக்கு எதிராக முக்கிய அ.தி.மு.க. வி.ஐ.பி.கள் யாருமே கேட்கவில்லை. அ.தி.மு.க.வின் மாவட்டச் செயலாளர்கள் பால கங்கா, ஆர்.எஸ்.ராஜேஷ், வெங்கடேஷ் பாபு ஆகியோர் பலமானவர்களாக இருந்தாலும் ராயபுரம் மனோவுக்காக உயிரைக் கொடுத்து வேலை செய்பவர்களாக இல்லை.

ராயபுரம் மனோ தன்னுடைய பணத்தை எடுத்து பெய்டு புரமோஷன் செய்கிறாரே தவிர, கட்சியினருக்குத் தருவதில்லை. எனவே, அ.தி.மு.க.வினர் அத்தனை உற்சாகமாக இல்லை. கட்சி மாறி வந்தவர் என்பதால் அ.தி.மு.க.வினர் சுணக்கம் காட்டுகிறார்கள்.

பா.ஜ.க.வின் அத்தனை முக்கிய தலைவர்களும் பால் கனகராஜுக்காக வந்து செல்வார்களே தவிர, உண்மையில் தீவிரமாக உழைப்பதற்கு பா.ஜ.க. நிர்வாகிகள் யாரும் பக்கத்தில் இல்லை. பா.ம.க.வுக்கும் டி.டி.வி.தினகரனுக்கும் ஒரு காலத்தில் இருந்த வாக்குகள் எதுவும் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.



ராயபுரம் மனோவும் பால் கனகராஜும் போட்டி போட்டுக்கொண்டு வாக்குகளைப் பிரிப்பதால், எதுவுமே செய்யாமல் இருந்தாலும் கலாநிதி வெற்றிக் கோட்டைத் தொடுகிறார்.

பஞ்ச் : கலாநிதிக்கு நல்ல யோகமடா





# பெரம்பலூர்

## அடுத்த வாரிசு வந்தாச்சு

தி.மு.க.வை வாரிசுகளின் கட்சி என்று பிரதமர் மோடியில் இருந்து சீமான் வரையிலும் திட்டிக்கொண்டே இருக்கிறார்கள். அதையெல்லாம் காதில் வாங்காமல் அடுத்தடுத்து வாரிசுகளை இறக்குவதில் ஸ்டாலின் உறுதியாகவே இருக்கிறார். அப்படித்தான் இப்போது பெரம்பலூருக்கு புதிய இறக்குமதி கே.என்.நேருவின் மகன் அருண் நேரு.


இவரை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் என்.டி.சந்திரமோகனும், பா.ஜ.க. சார்பில் பச்சமுத்து எனப்படும் பாரிவேந்தரும் களத்தில் நிற்கிறார்கள்.

இந்த தொகுதிக்குள் அடங்கியிருக்கும் குளித்தலை, லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, துறையூர் (தனி), பெரம்பலூர் (தனி) ஆகிய சட்டமன்ற தொகுதிகளும் தி.மு.க. வசம் உள்ளன. ஆகவே, எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் சேர்ந்து நேருவின் மகனுக்கு தங்கள் பலத்தை நேருக்குக் காட்ட வேண்டிய நேரம் இது.

இங்கு போட்டியிட வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அருண் நேரு முடிவு செய்துவிட்டதால் இந்த தொகுதிகளுக்குள் கட்சி நிகழ்ச்சி, கல்யாண நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மக்களுக்கு அறிமுகம் ஆகிவிட்டார். ஆகவே, தி.மு.க.வினர் மிகவும் உற்சாகமாக உள்ளனர். நிச்சயம் பணம் நிறையவே செலவழிப்பார்.

அ.தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் வனத்துறை அமைச்சர் என். செல்வராஜின் சகோதரர் மகன் என்.டி.சந்திரமோகன் நிற்கிறார். இங்குள்ள பெரும்பான்மை மக்களான முத்திரையர் இனம் என்பதால் ஜாதி வாக்குகள், அ.தி.மு.க. வாக்குகள் என 2 லட்சம் வாக்குகள் நிச்சயம் வாங்குவார். கான்ட்ராக்ட் தொழில் செய்துவருவதால் ஓரளவுக்கு பணம் செலவழிப்பார்.

இந்திய ஜனநாயக கட்சியின் சிட்டிங் எம்.பி.யான பாரிவேந்தருக்கு தொகுதியில் சொந்த செல்வாக்கு இருக்கிறது. தனது கல்லூரியில் ஏழை எளியவர்களுக்கு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 50 இலவச சீட் கொடுத்து மக்கள் மனதில் இடம் பிடித்திருக்கிறார். நிறைய பணம் செலவழிக்கக்கூடியவர். கடந்த முறை தி.மு.க. கூட்டணியில் ஜெயித்தாலும் பா.ஜ.க. பக்கம் சென்றதும் தொகுதிக்கு நிறைய செய்திருக்கிறார். அதோடு ஆன்மிகம், அறப்பணிகளுக்கு தொகுதிக்கு நிறைய பண உதவி செய்திருப்பதால் நிச்சயம் 2 லட்சம் வாக்குகள் பெறுவார்.



சந்திரமோகனும் பாரிவேந்தரும் குறிப்பிட்ட அளவுக்கு வாக்குகள் வாங்குவார்கள் என்பதால் இந்த போட்டிகளுக்கு இடையில் நேருவின் மகனுக்கே ஜெயம்.

பஞ்ச் : நேருவின் மகனே வருக..

# தூத்துக்குடி

## அக்காவுக்குப் போட்டியே இல்லை

இரண்டாவது முறையாக தூத்துக்குடியில் போட்டியிடும் கனிமொழி, இந்த தொகுதியை அவருடைய இரும்புக் கோட்டையாக மாற்றி வைத்திருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும்.

வெளியூர் வேட்பாளர், கருணாநிதியின் மகள் என்றெல்லாம் கடந்த தேர்தலில் யோசித்த மக்களுக்கு விடை சொல்வது போன்று அவ்வப்போது தொகுதிக்கு வருகிறார். அவரது எம்.பி. அலுவலகம் முழு நேரமும் செயல்படுகிறது. கனிமொழியை நேரில் பார்த்து மனு கொடுக்கவும் முடிகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக சமீபத்திய மழை வெள்ள காலத்தில் தொகுதி மக்களுடன் ஒருவராக நின்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதில் தொகுதிக்குள் இவர் மீது நல்ல அபிப்ராயம் நிலவுகிறது.

கடந்த 2019 தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் கனிமொழியை எதிர்த்து அப்போதைய பா.ஜ.க மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் போட்டியிட்டார். அப்போது கனிமொழி  5.63 லட்சம் வாக்குகளும் தமிழிசை 2.15 லட்சம் வாக்குகளும் பெற்றனர்.

இந்த தேர்தலில் கனிமொழியை எதிர்த்து அ.தி.மு.க சார்பில் சிவசாமி வேலுமணி போட்டியிடுகிறார். உள்ளூரைச் சேர்ந்தவர் என்பது மட்டுமே இவருக்கு பிளஸ். தூத்துக்குடியில் அ.தி.மு.க.வுக்கும் தி.மு.க.வுக்கும் கணிசமான வாக்குகள் இருந்தாலும் கனிமொழிக்கு எதிராக சிவசாமியால் களமாட இயலவில்லை என்பதே நிதர்சனம்.

பா.ஜ.க. கூட்டணியில் தூத்துக்குடி தொகுதி த.மா.கா-வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், த.மா.கா சார்பில் எஸ்.டி.ஆர். விஜயசீலன் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகிறார். தொகுதியில் மும்முனைப் போட்டி என்றாலும் உண்மையான போட்டி கனிமொழிக்கும் சிவசாமிக்கும் தான்.

நாடார்கள், பட்டியலினத்தவர்கள், மீனவர்கள், இஸ்லாமியர்கள், முக்குலத்தோர், நாயக்கர், வெள்ளாளர் அதிகம் வசிக்கிறார்கள். கனிமொழிக்கு நாடார் வாக்குகள் கடந்த முறை போலவே இந்த முறையும் கிடைக்கிறது. அதோடு அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோரும் தீவிரமாக களப்பணியாற்றுகிறார்கள்.

குலசேகரப்பட்டினத்தில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் அமைவதற்கு கனிமொழி மேற்கொண்ட தொடர் முயற்சியே காரணம் என்று சொல்லி வாக்கு கேட்கிறார். அதேநேரம் கப்பல் கட்டும் தொழிற்சாலை நீண்ட கால கோரிக்கை நிறைவேறவில்லை. மீனவர்களுக்கு கடல் ஆம்புலன்ஸ் அமைப்பதாகச் சொன்ன வாக்குறுதி நடக்கவில்லை. ரெடிமேட் ஜவுளிப் பூங்கா அமைப்பதாகச் சொன்னது நிறைவேறவில்லை. புதிய தொழிற்சாலைகள் எதுவும் வரவில்லை. இதெல்லாம் பிரச்னையாக மாறவில்லை.



இந்த தொகுதியை சசிகலா புஷ்பா பா.ஜ.க.வில் எதிர்பார்த்தார். கூட்டணிக்குப் போனதால் அவர் கப்சிப் என மாறிவிட்டார். பிரதமரே வந்து வாக்கு சேகரித்தாலும் எதுவும் மாறவில்லை. அ,தி.மு.க.வில் முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் ராஜூ, சண்முகநாதன், செல்லப்பாண்டியன் மற்றும் நட்டர்ஜி ஆகியோர் அத்தனை தீவிரமாக களத்தில் இல்லை என்பதால் எளிதில் முந்துகிறார் கனிமொழி.

பஞ்ச் :  கனிமொழிக்கு பதக்கம் ரெடி.





# கன்னியாகுமரி

## பொன்னாரை புண் படுத்துறாங்களே

முன்னாள் அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் 10வது முறையாக கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிடுவதால் கன்னியாகுமரி ஸ்டார் தொகுதி அந்தஸ்து பெறுகிறது. ஜெயித்தால் மீண்டும் அமைச்சர் என்று வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார் பொன்னார்.

கடந்த 2014 தேர்தலில் இங்கு பொன்.ராதாகிருஷ்ணன் 3.72 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதுடன், மத்திய இணை அமைச்சராகவும் இருந்தார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட வசந்தகுமார் 2.44 லட்சம் வாக்குகளே வாங்க முடிந்தது. ஆனால், 2019 தேர்தலில் களம் மாறியது. வசந்தகுமார் 6.27, லட்சம் வாக்குகள் பெற்று வெற்றிபெற்ற நேரத்தில் பொன்.ராதாகிருஷ்ணன் 3.67 வாக்குகள் மட்டுமே பெற்றார்.

கொரோனா தொற்று காலத்தில் வசந்தகுமார் உயிரிழந்த காரனத்தால் 2021ல் நடந்த இடைத்தேர்தலில் வசந்தகுமாரின் மகன் விஜய் வசந்த் காங்கிரஸ் சார்பிலும், பொன்.ராதாகிருஷ்ணன் பாஜக சார்பிலும் போட்டியிட்டனர். இந்த தேர்தலில் விஜய் வசந்த் 4.15 லட்சம் வாக்குகள் பெற்று எம்.பி.யானார். தற்போதைய மக்களவைத் தேர்தலிலும் மீண்டும் இதே ஜோடி போட்டியிடுகிறது.

எடப்பாடி பழனிசாமியின் வேட்பாளராக அ.தி.மு.க. சார்பில் பசிலியான் நசரேத் களத்தில் இருக்கிறார். இந்த தொகுதியில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் கடற்கரைக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் வாக்குகள் தனக்கு அதிகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பசிலியான் நசரேத் உள்ளார்

தனது சொந்த நிதியில் நகர, கிராம மக்களுக்கு செய்த சேவைகளைக் கூறி வாக்கு சேகரித்து வருகிறார் நடப்பு எம்.பி.யான விஜய் வசந்த். மத்திய இணை அமைச்சராக தான் இருந்த சமயங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நாற்கர சாலைத் திட்டங்கள், ஆற்றுப் பாலங்கள், ரயில் பாதை திட்டம் மற்றும் மத்திய அரசின் சாதனைகளைக் கூறி பொன்.ராதாகிருஷ்ணன் வாக்கு சேகரித்து வருகிறார்.

இங்கு மத ரீதியான வாக்குகளே தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கின்றன. தேர்தல் அறிவிப்புக்கு ஓராண்டுக்கு முன்னரே விஜய் வசந்தும், பொன். ராதாகிருஷ்ணனும் மாவட்டம் முழுவதும் தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டதால் போட்டி கடுமையாக உள்ளது.



பெரும்பான்மையாக உள்ள கிறிஸ்தவர்கள் வாக்குகளை விஜய் வசந்த் பெறுவாரா அல்லது கிறிஸ்தவர்களான பசிலியான் நசரேத்துக்குப் போகுமா என்பதே கேள்வி. மீனவர் வாக்குகள் பிரிந்தாலும் நடுநிலை இந்துக்கள் வாக்குகளும் ஜாதி ஓட்டுக்களும் விஜய் வசந்துக்கே கை கொடுக்கிறது. ஆகவே, மீண்டும் ஒரு முறை தோல்வியைத் தழுவுகிறார் பொன்.ராதாகிருஷ்ணன்.

பஞ்ச் : விஜய் வசந்துக்கு மீண்டும் வசந்தம்.

# நெல்லை

## மூன்று கட்சிகளிலும் குழப்பமோ குழப்பம்

தி.மு.க. கூட்டணிக்கு வீக்கான தொகுதி என்று நெல்லை கருதப்பட்ட காரணத்தாலே, இந்த தொகுதி காங்கிரஸ் கட்சிக்குப் போயிருக்கிறது. சிட்டிங் எம்.பி.யான ஞானதிரவியத்தின் மீது கட்சி நிர்வாகிகள், தொண்டர்களிடம் நல்ல பெயர் இல்லை. மேலும் இவரது குவாரியில் முறைகேடு நடப்பதாக வழக்குகள் பதியப்பட்டுள்ளன. கிறிஸ்தவ சி.எஸ்.ஐ. திருமண்டலத்திடமும் இவர் மோதிய காரணத்தால் இவருக்கு சீட் கொடுக்க விரும்பவில்லை. அதேநேரம் சபாநாயகர் அப்பாவு அவரது மகன் அலெக்ஸ்க்கு சீட் கேட்டதால், அவருக்குக் கொடுக்க விரும்பாமல் தொகுதியை காங்கிரஸ் பக்கம் தள்ளிவிட்டனர்.

எனவே தி.மு.க கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸும், அ.தி.மு.க சார்பில் ஜான்சி ராணியும், பா.ஜ.க சார்பில் நெல்லை எம்.எல்.ஏ.வான நயினார் நாகேந்திரனும்போட்டியிடுகிறார்கள்.


நெல்லையில் சரத்குமார் நிற்கப் போகிறார் என்று தெரியவந்ததுமே, நயினார் சுதாரித்துக்கொண்டார். இங்கே ஜெயித்து மந்திரி ஆகிவிடலாம் என்று ஆசைப்பட்டவர், தலைமை அறிவிக்கும் முன்னரே இங்கு தேர்தல் வேலையைத் தொடங்கிவிட்டார்.

நெல்லை தொகுதியின் வெற்றி தோல்விகளை தீர்மானிப்பதே இஸ்லாமிய வாக்குகளும் நாடார் சமூக வாக்குகளும்தான். நயினாருக்கு இந்த வாக்குகள் கிடைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. மேலும் இங்கு அ.தி.மு.க.வுக்கு நல்ல அடித்தளம் உள்ளது. அதனாலே நயினார் திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினராக வெற்றியும் பெற்றார். அ.தி.மு.க. தயவின்றி தேர்தலைச் சந்திக்கும் காரணத்தால் நயினாருக்கு நெல்லையிலே வாக்குகள் கிடைக்காது.

காங்கிரஸ் கட்சியில் இந்த தொகுதியை ரூபிமனோகரன் அல்லது ராமசுப்பு எதிர்பார்த்தனர். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ராபர்ட் புரூஸ் களம் இறக்கப்பட்டுள்ளார். நாடார் ஓட்டுக்கள் விழும் என்று நம்புகிறார்கள். இவருக்காக அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கிரகாம்பெல் போன்றோர் இப்போது கடுமையாக உழைத்துவருகிறார்கள்.

இந்த நிலையில் நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் ஆவணமின்றி கொண்டுசெல்லப்பட்ட 4 கோடி ரூபாயை கைப்பற்றப்பட்ட விவகாரத்தில் நயினார் நாகேந்திரன் பெயர் அடிபட்டது. அதோடு, ‘1,500 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை நயினார் நாகேந்திரன் மறைந்திருக்கிறார்’ என மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஒருவர் புகார் கொடுத்திருப்பதால் இந்த தேர்தலில் நயினார் பணம் இறக்குவதற்கு வாய்ப்பு குறைவு.

இங்கு அ.தி.மு.க. வேட்பாளராக முதலில் அறிவிக்கப்பட்டிருந்த சிம்லா முத்துச்சோழனுக்குப் பதிலாக ஜான்சி ராணி நிறுத்தப்பட்டுள்ளார். திமுகவிலிருந்து விலகி அதிமுகவில் இணைந்தவருக்கு எப்படி சீட் தரலாம் என்று எதிர்ப்பு கிளம்பியதாலே ஜான்சி ராணி நிறுத்தப்பட்டுள்ளார். இந்த குழப்பம் அ.தி.மு.க.வினரிடம் பெரும் அதிருப்தி ஏற்படுத்தியிருக்கிறது.



இரட்டை இலைக்கு என இருக்கும் வாக்குகளும் பா.ஜ.க.வுக்கும் தினகரனுக்கும் உள்ள வாக்குகளும் தனித்தனியே பிரிவதால் ராபர்ட் புரூஸ் எம்.பி. ஆகிறார்.

**பஞ்ச் : குழப்பங்களுக்கு இடையில் கைக்கு கும்மாளம்**





# திருப்பூர்

## உறுதி காட்டும் உழைக்கும் வர்க்கம்

வந்தாரை எல்லாம் வாழவைத்த திருப்பூர் இப்போது வேலை இல்லாமலும் ஜி.எஸ்.டி., பஞ்சு, மின்சாரம், சாயம் போன்ற பஞ்சாயத்துக்களாலும் மூடிக்கிடக்கும் அவலத்துக்கு ஆளாகியுள்ளது. இதற்கெல்லாம் காரணம் கடந்த 10 ஆண்டு பா.ஜ.க. ஆட்சியே என்று கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் உரத்துக் குரல் கொடுத்து வருகிறார்கள். எனவே, இந்த முறையும் தொகுதி அவர்களுக்கே போயிருக்கிறது.

தி.மு.க. கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மீண்டும் சுப்பராயன் களத்தில் நிற்கிறார். அ.தி.மு.க. சார்பில் பெருந்துறை பேரூராட்சி கவுன்சிலராக இருக்கும் அருணாசலமும் பா.ஜ.க. சார்பில் ஏ.பி. முருகானந்தமும் போட்டியிடுகிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் 75 வயதைக் கடந்தவர்களுக்கும், 2 முறைக்கு மேல் தேர்தலில் போட்டியிட்டவர்களுக்கும் வாய்ப்பு இல்லை என்ற விதி இருந்தாலும், அது சுப்பராயனுக்காக மீறப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு கட்சியில் அவர் செல்வாக்குடன் இருக்கிறார். மேலும் சுப்பராயன் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர், தொழிலதிபர்கள், தொழிலாளர்களுக்கு நெருக்கமானவர் என்பதால் அவரையே நிறுத்தியிருக்கிறார்கள்.

சுப்பராயன் கடந்த தேர்தலில் அடுத்துவந்த அ.தி.மு.க.வை விட சுமார் 95 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். மக்கள் நீதி மய்யம் 64 ஆயிரம் வாக்குகளும் நாம் தமிழர் 42 ஆயிரம் வாக்குகளும் பெற்றனர்.

இந்த நாடாளுமன்றத் தொகுதிக்குள் வரும் பெருந்துறை, பவானி, கோபிச்செட்டிபாளையம், திருப்பூர் வடக்கு போன்ற சட்டமன்றத் தொகுதிகளை அ.தி.மு.க.வும் அந்தியூர், திருப்பூர் தெற்கும் தி.மு.க. வசமும் உள்ளன. அறிமுகம் இல்லாத வேட்பாளர் என்பதால் இந்த தேர்தலில் செங்கோட்டையன், கே.சி.கருப்பணன் ஆகியோர் ஆக்டிவாக பேசும் அளவுக்கு செயல்படுவதாகத் தெரியவில்லை.

அண்ணாமலைக்கு நெருக்கமான ஏ.பி.முருகானந்தம் வேட்பாளராக நிற்கிறார். கோவையைச் சேர்ந்தவர் திருப்பூரில் போட்டியிடுகிறார். இவர் தேர்தல் அதிகாரிகளை காரில் இருந்து மிரட்டிய வீடியோ வைரலானது. ஆனாலும், இந்த பகுதியில் பா.ஜக.வுக்கு உள்ள ஓரளவு வாக்கு வங்கி இவருக்கு வந்து சேரும். வெளிமாநிலத் தொழிலாளர்கள் பா.ஜ.க.வுக்கு வாக்களிப்பார்கள் என்று நம்புகிறார்கள். அதோடு இங்குள்ள வன்னியர் வாக்குகள் தங்களுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். எனவே, பணம், மதம், ஜாதிகளை கொண்டு எப்படியும் இரண்டாவது இடத்தைப் பிடித்துவிட வேண்டும் என்று உழைக்கிறார்கள்.



போட்டி இப்போது தி.மு.க.வுக்கும் பா.ஜ.க.வுக்கும் என்று தெரிந்தாலும் இரட்டை இலைக்கு வாக்குகள் விழுவதைத் தடுக்க முடியாது. தொழிலாளர்களும் சுப்பராயனை கைவிட மாட்டார்கள்.

**பஞ்ச் : செங்கொடி வேகமாகப் பறக்கிறது.**

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# சேலம்

## எடப்பாடி பழனிசாமிக்கும் டாக்டர் ராமதாஸ்க்கும் போட்டி

எடப்பாடி பழனிசாமியின் பலத்தைக் காட்டும் தொகுதியான சேலத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தி.மு.க.வில் டி.எம்.செல்வகணபதிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வில் விக்னேஷும், பா.ம.க. சார்பில் அண்ணாதுரையும் மோதுகிறார்கள்.

சேலம் நாடாளுமன்றத் தொகுதிக்குள் வரும் ஓமலூர், எடப்பாடி, வீரபாண்டி, சேலம் வடக்கு, மேற்கு, தெற்கு சட்டமன்ற தொகுதிகளில் ஒரே ஒரு தொகுதி மட்டுமே தி.மு.க. வசம் உள்ளது. ஒரு வகையில் இது அ.தி.மு.க.வின் கோட்டை. அதேநேரம், இந்த பகுதியில் வன்னியர்கள் ஆதிக்கம் அதிகம். எனவே, அனைத்துக் கட்சிகளும் வன்னியர்களையே நிறுத்தியுள்ளனர். இவர்களையடுத்து பட்டியலின மக்கள், கவுண்டர், செட்டியார், முதலியார் ஆகியோர் உள்ளனர். இதுவரை அ.தி.மு.க. இங்கு ஜெயித்து வந்ததற்கு பா.ம.க.வின் வன்னியர் வாக்குகளும் ஒரு முக்கிய காரணம்.

சேலத்தின் சிட்டிங் எம்.பி. பார்த்திபன் தொகுதிக்கு நிறையவே செய்திருக்கிறார். கெட்ட பெயர் இல்லை என்றாலும் மாவட்டச் செயலாளர்கள் செல்வகணபதி, ராஜேந்திரன் ஆகியோரை மீறி அரசியல் செய்த காரணத்தாலே கழட்டி விடப்பட்டுள்ளார். எனவே, தி.மு.க.வில் ஒரு பிரிவினர் அதிருப்தியில் உள்ளனர்.

மேலும், வீரபாண்டியார் குடும்பத்தினர் நீண்ட நாட்களாக அங்கீகாரத்துக்குக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வாய்ப்பு இல்லை என்பதால் மன வருத்தத்தில் உள்ளனர். கடந்த 2019 தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் எஸ்.ஆர்.பார்த்திபன் 6.06 லட்சம் வாக்குகளும் அ.தி.மு.க வேட்பாளர் சரவணன் 4.59 லட்சம் வாக்குகளும் பெற்றனர். மக்கள் நீதி மய்யம் கட்சியைச் சேர்ந்த பிரபு மணிகண்டன் 58 ஆயிரம் வாக்குகளும் நாம் தமிழர் 33 ஆயிரம் வாக்குகளும் பெற்றனர்.

எடப்பாடி பழனிசாமிக்கு இங்கு வெற்றி முக்கியம். சொந்த தொகுதி இங்கு வருவதால் பணம் நிறைய விளையாடும். செம்மலை தீவிரமாக பணியாற்றுவதில்லை என்றாலும் எடப்பாடியின் நண்பர் இளங்கோவன் தீவிரமாக பணியாற்றுகிறார். அ.தி.மு.க.வில் அதிக அனுபவமில்லாத அம்மா பேரவை துணை செயலாளர் விக்னேஷ் நிறுத்தப்பட்டுள்ளார். இங்கு தே.மு.தி.க.வுக்கு ஓரளவுக்கு வாக்கு வங்கி இருக்கிறது. அது விக்னேஷுக்கு கை கொடுக்கும்.

அதேநேரம், பா.ம.க.வுக்கு இந்த தொகுதியில் தங்களை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் அதிக வாக்குகள் வாங்குவதற்கு கடுமையாக உழைப்பார்கள். வாக்குகள் பிரிவதால் எளிதான வெற்றி கிடைக்கும். இந்த தொகுதியை காரணம் காட்டியே பா.ம.க. கூட்டணியில் இருந்து வெளியேறியது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அண்ணாதுரை அறிவிப்பு கட்சியினருக்கு ஏமாற்றம் என்றாலும் கணிசமாக வாக்குகள் பிரியும்.



இலையும் மாம்பழமும் போட்டி போட்டுக்கொண்டு வாக்குகளைப் பிரிப்பதால் செல்வகணபதி எளிதில் வெற்றி அடைகிறார்.

பஞ்ச் : ஆடுகள் முட்டிக்கொள்வதால் செல்வகணபதிக்கு யோகம்.



40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# சிதம்பரம் (தனி)

## திருமாவின் பானைக்கு சேதாரம் இல்லை

கடந்த தேர்தலைப் போலவே இப்போதும் பானை சின்னத்தில் இங்கு நிற்கிறார் திருமாவளவன். மூன்று தொகுதிக்கு ஆசைப்பட்டவருக்கு தி.மு.க. கூட்டணியில் இந்த முறையும் இரண்டுதான் கிடைத்தது. திருமாவளவனுக்கு எதிராக அ.தி.மு.க.வின் சந்திரகாசனும் பா.ஜக.வின் கார்த்தியாயினியும் நிற்கிறார்கள்.

இந்த நாடாளுமன்றத் தொகுதிக்குள் சிதம்பரம், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம், காட்டுமன்னார் கோவில், புவனகிரி ஆகிய ஆறு சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் குன்னம், ஜெயங்கொண்டம் இரண்டு தொகுதிகள் தி.முக.விடமும் அரியலூர், காட்டுமன்னார்கோயில் தொகுதிகள் கூட்டணிக் கட்சிகளான ம.தி.மு.க., வி.சி.க. வசமும் உள்ளன. புவனகிரி, சிதம்பரம் அதிமுக வசம் உள்ளது. பா.ம.க.வுக்கு செல்வாக்குள்ள குன்னம், புவனகிரி தொகுதியில் பல இடங்களில் திருமாவளவன் நுழையவே முடியாத அளவுக்கு வன்னியர்கள் ஆதிக்கம் இருக்கிறது. அன்றும் இன்றும் வேல்முருகன் ஆதரவு மட்டுமே இவருக்குக் கை கொடுக்கிறது.

சிதம்பரம் தொகுதியில் வன்னியர்கள் அதிகம் வசிக்கிறார்கள். இவர்களை அடுத்து ஆதிதிராவிடர், முதலியார், உடையார், செட்டியார், நாயுடு, பிள்ளை, கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் கணிசமாக உள்ளார்கள். சிதம்பரம் லோக்சபா தொகுதிக்கு உட்பட்ட குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள அன்னூர் திருமாவளவனின் சொந்த ஊர். தொடர்ந்து இங்கு போட்டியிட்டு வருகிறார். 1999, 2004 ஆண்டுகளில் தோல்வி என்றாலும் இரண்டாவது இடம் பிடித்தார். 2009ல் தி.மு.க. கூட்டணியில் வென்றார். 2014ல் வெற்றி வாய்ப்பை இழந்தார். 2019ல் வெற்றி பெற்றவர் இப்போது மீண்டும் போட்டி போடுகிறார்.

இந்த தொகுதியில் அ.தி.மு.க., தி.மு.க. பா.ம.க., வி.சி.க. ஆகிய நான்கு கட்சிகளுக்கும் கணிசமான வாக்கு வங்கி உண்டு. அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியை நம்பி பெரம்பலூர் மாவட்ட அ.தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் சந்திரகாசன் வேட்பாளராக களம் இறக்கப்பட்டுள்ளார். எடப்பாடியின் தீவிர ஆதரவாளரான சந்திரகாசன் முதன்முதலாக தேர்தல் களம் காண்கிறார். மாவட்டச் செயலாளர் தாமரை ராஜேந்திரனின் ஆதரவு மட்டுமே உள்ளது. மாஜி அமைச்சர் வீரமணி தீவிரம் காட்டுவதாகத் தெரியவில்லை. கடந்த 2011ம் ஆண்டு வேலூர் தொகுதியில் அ.தி.மு.க. மேயராக ஜெயலலிதாவால் தேர்வு செய்யப்பட்ட கார்த்தியாயினி இப்போது பா.ஜ.க. வேட்பாளர். ஜெயலலிதாவுக்கு தண்டனை கொடுத்த நீதிபதியை விமர்சனம் செய்து பரபரப்பு ஏற்படுத்தியவர். இவர் மாஜி அமைச்சர்கள் ஏ.எல்.விஜய், கே.சி. வீரமணி ஆகியோரை பகைத்துக்கொண்டதால் அ.தி.மு.க.வில் ஓரங்கட்டப்பட்டார். அதன்பிறகு பா.ஜ.க.வில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

பா.ஜ.க.வில் சரவணகுமாருக்கு சீட் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அண்ணாமலை ஆதரவில் கார்த்திகாயினி சீட் வாங்கியிருப்பதால் கட்சிக்குள் அதிருப்தி நிலவுகிறது. இவரது பேச்சு பல இடங்களில் பிரச்னையை உருவாக்கியுள்ளது. பா.ஜ.க.வின் சரவணகுமார், தடா பெரியசாமி ஆகியோர் திருப்தியாக இல்லை. பா.ம.க.வில் பொன்னுசாமி ஆக்டிவ் ஆக இல்லை.

இந்த தொகுதியில் திருமாவளவனுக்கு கட்சியை மீறி தனிப்பட்ட செல்வாக்கு இருக்கிறது. வன்னியர்கள் அதிகம் உள்ள தொகுதி என்பதால் பா.ம.க. நின்றிருந்தால் போட்டி கடுமையாக இருந்திருக்கும். அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கணேசன் ஆகியோர் திருமாவளவனுக்கு தீவிரமாகப் பணியாற்றுகிறார்கள். வேல்முருகன் தீவிரமாக களப்பணி ஆற்றுகிறார். அ.தி.மு.க.வுக்கும் பா.ம.க.வுக்கும் உள்ள வாக்குகள் கணிசமாகப் பிரிவதால் திருமா எளிதில் வெற்றி பெறுகிறார்.



பஞ்ச் : பானையில் வெற்றி மேளம்

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# ஸ்ரீபெரும்புதூர்

## இன்னும் எத்தனை தடவை இவரை நிறுத்துவாங்க..?

தி.மு.க.வுக்கு என்று எழுதிக் கொடுக்கப்பட்ட தொகுதி என்று ஸ்ரீபெரும்புதூரைச் சொல்லலாம். இங்கு வழக்கம் போல் இந்த முறையும் டி.ஆர்.பாலு நிற்கிறார். அவரை எதிர்த்து அ.தி.மு.க.வில் டாக்டர் ஜி.பிரேம்குமாரும் பா.ஜ.க. கூட்டணியில் ஒதுக்கப்பட்ட த.மா.கா.வில் வேணுகோபாலும் நிற்கிறார்கள்.

ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மதுரவாயல், அம்பத்தூர், ஆலந்தூர், ஸ்ரீபெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம் என எல்லாமே தி.மு.க. வசமே உள்ளது. இங்கு வன்னியர்களும் பட்டியலின சமூகத்தினரும் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். ரெட்டியார், யாதவ சமூகத்தினர் உள்ளனர். எனவே, விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு தனிப்பட்ட செல்வாக்கு இருக்கிறது.

இங்கு தயாரிக்கப்படும் வாகனங்கள், பொருட்களைத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்ல வசதியாக சென்னை துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம் நீண்ட காலமாக கிடப்பில் உள்ளது. அரசு பன்னோக்கு மருத்துவமனை அமைக்க வேண்டுமென்பது நீண்ட காலக் கோரிக்கை. ரயில் போக்குவரத்து வசதி கோரிக்கை கேட்கப்படவே இல்லை என்று இந்த தொகுதியில் எக்கச்சக்க பிரச்னை இருந்தாலும், அது தி.மு.க.வை பாதிப்பதாகத் தெரியவில்லை.

83 வயதாகும் தி.மு.க.வின் பொருளாளரான டி.ஆர்.பாலு 1996-ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக 5 முறை எம்.பி.யாக உள்ளார். கடந்த தேர்தலில் 7.93 லட்சம் வாக்குகள் வாங்கி சுமார் 5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட பா.ம.க.வின் வைத்திலிங்கம் 2.85 வாக்குகளும், மக்கள் நீதி மய்யத்தின் ஸ்ரீதர் 1.35 லட்சம் வாக்குகளும் பெற்றனர்.

டி.ஆர். பாலுவை எந்த ஒரு நபராலும் சந்திக்கவே முடியாது. சாதாரண பிரச்னைகளை கண்டுகொள்ளவே மாட்டார். தொகுதி பக்கம் போகவே மாட்டார். அதேநேரம், தொகுதி தி.மு.க. நிர்வாகிகளை கைக்குள் வைத்திருப்பவர் என்பதால் ஓட்டுக்களை சேகரித்துவிடுகிறார்.

மாஜி அமைச்சர்கள் வளர்மதி, பெஞ்சமின், சிட்லபாக்கம் ராஜேந்திரன், அலெக்சாண்டர் ஆகியோர் ஆக்டிவ் பாலிடிக்ஸ் செய்பவர்கள் என்றாலும் டாக்டர் பிரேம்குமாருக்காக இறங்கி பணியாற்ற மாட்டார்கள்.

பா.ம.க.வில் ஏ.கே.மூர்த்தி கொஞ்சம் வலிமையாக இருக்கிறார் என்றாலும் வன்னியர்கள் ஓட்டு த.மா.கா.வுக்கு கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. பா.ஜ.க.வில் தொகுதி கிடைக்கும் என்று எதிர்பார்த்த டால்பின் ஸ்ரீதர், சக்திவேல், காயத்ரி ஆகியோர் அதிருப்தியில் இருக்கிறார்கள்.



பொதுவாகவே இந்த தொகுதியில் தி.மு.க., காங்கிரஸ் கட்சிக்கு வாக்குகள் அதிகம். டி.ஆர்.பாலு பணம் விளையாடும். அ.தி.மு.க.வின் பிரேம்குமார், த.மா.கா.வின் வேணுகோபால் ஆகியோருக்கு தனிப்பட்ட செல்வாக்கு, அறிமுகம் இல்லை. டி.ஆர். பாலுவின் மகன் டி.ஆர்.பி. ராஜா மற்றும் தா.மோ.அன்பரசன் கடுமையாக உழைத்து வெற்றி பெற்றுத்தருவார்கள்.

**பஞ்ச் : மீண்டும் மீண்டும் பாலு**





40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# விருதுநகர்

## ராதிகா இம்புட்டு அழகா இருக்காங்களே

காமராஜர் பிறந்த விருதுநகர் தொகுதியில் மீண்டும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக மாணிக்கம் தாகூர் நிற்கிறார். அவரை எதிர்த்து அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. சார்பில் விஜயகாந்தின் மகன் விஜயபிரபாகரனும் பா.ஜ.க. சார்பில் சமீபத்தில் தன்னுடைய கட்சியை கலைத்துவிட்ட சரத்குமாரின் மனைவியுமான ராதிகாவும் வேட்பாளர்களாக நிற்கிறார்கள்.

ராதிகாவும் விஜயபிரபாகரனும் போட்டியிடுவதால் இந்த தொகுதிக்கு திடீரென வி.ஐ.பி. அந்தஸ்து வந்துவிட்டது. ராதிகா எங்கு வருகிறார் என்று தேடிப் போய் பார்க்கிறார்கள். அறுபது வயசுன்னு சொல்றாங்க.. இம்புட்டு அழகா இருக்குது என்று பாராட்டுகிறார்கள்.

விஜயகாந்த்தின் சொந்த ஊரான அருப்புக்கோட்டை அருகே உள்ள ராமானுஜபுரம் விருதுநகர் மக்களவைத் தொகுதிக்குள் வருவதால் இந்த தொகுதியை கேட்டு வாங்கியிருக்கிறார் விஜயபிரபாகரன். விஜயகாந்த் அனுதாப ஓட்டு கை கொடுக்கும் என்று நம்புகிறார்.

கடந்த தேர்தலில் இங்கு போட்டியிட்ட மாணிக்கம் தாகூர் 4.70 லட்சம் வாக்குகள் வாங்கினார். அடுத்துவந்த அ.தி.மு.க. கூட்டணியின் தே.மு.தி.க. வேட்பாளர் அழகர்சாமி 3.16 லட்சம் வாக்குகள் வாங்கினார். அ.தி.மு.க.வுக்கு இங்கு இருக்கும் பலமான வாக்கு வங்கியை விஜயபிரபாகரன் பெற்றுவிடத் துடிக்கிறார்.

இங்கு நாயக்கர், நாடார், தேவர் இன வாக்குகள் அதிகம் உள்ளன. வைகோவுக்கு இந்த தொகுதியில் செல்வாக்கு உள்ளது. அதோடு காங்கிரஸ் மற்றும் தி.மு.க.வுக்கும் செல்வாக்கு இருக்கிறது.



சரத்குமார் இங்கு நின்றிருந்தால் நாடார் வாக்குகளை வாங்கியிருக்கலாம் என்ற எண்ணம் இப்போது பா.ஜ.க.வுக்கு வருகிறது. ராதிகாவை வேடிக்கை பார்க்க வருபவர்கள் ஓட்டு போடுவார்களா என்பது சந்தேகமே. பா.ஜ.க., பா.ம.க. மற்றும் அ.ம.மு.க.வுக்கு இங்கு பலமான வாக்கு வங்கி இல்லை. ஆகவே, இன்றைய நிலையில் ராதிகாவை முந்திக்கொண்டு விஜயபிரபாகரன் செல்கிறார். இவர்கள் இருவரையும் விட வேகமாக மாணிக்கம் தாகூர் வெற்றிக் கோட்டைத் தொடுகிறார்.

**பஞ்ச் : சினிமா கவர்ச்சியை வெல்கிறது கை.**

# ராமநாதபுரம்

## தனியே தன்னந்தனியே ஓ.பன்னீர்செல்வம்

பிரதமர் மோடி போட்டியிட விரும்பிய தொகுதியில் நான் பெருமையுடன் போட்டியிடுகிறேன் என்று சுயேட்சை வேட்பாளராக பலாப்பழ சின்னத்தில் நிற்கிறார் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம். இவர் நிற்பதாலே இந்த தொகுதி வி.ஐ.பி. தொகுதியாக மாறியிருக்கிறது.

ராமநாதபுரம் மக்களவைத் தொகுதிக்குள் இருக்கும் ராமநாதபுரம், பரமக்குடி (தனி), முதுகுளத்தூர், திருவாடானை, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சுழி, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கி ஆகிய 6 சட்டப்பேரவை தொகுதிகளிலும் தி.முக. கூட்டணிகளே பலம் காட்டுகின்றன.

இஸ்லாமியர், முக்குலத்தோர், மீனவர்கள் நிரம்பிய தொகுதி. கடந்த 2019 தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் நவாஸ் கனி 4.69 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவர் அ.தி.மு.க. கூட்டணியின் பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரனை விட 1.27 லட்சம் வாக்குகள் கூடுதலாக பெற்றார். அப்போது அ.ம.மு.க. வேட்பாளரும் முன்னாள் அமைச்சர் நடராஜனின் மகனுமான ஆனந்த் 1.41 லட்சம் வாக்குகள் பெற்றார். இந்த வாக்குகளையும் பா.ஜ.க.வுக்கு செல்வாக்கு வளர்ந்துள்ளது என்பதையும் நம்பியே ஓ.பன்னீர்செல்வம் இங்கு நிற்கிறார்.

தி.மு.க. கூட்டணியில் தற்போதைய எம்பியான நவாஸ் கனி ஏணி சின்னத்திலும் அ.தி.மு.க .வேட்பாளர் ஜெயபெருமாளும் ஓ. பன்னீர்செல்வத்துக்குப் போட்டியாக மேலும் நான்கு ஓ.பன்னீர்செல்வமும் தேர்தலில் நிற்கிறார்கள்.

நவாஸ் கனி தொகுதிக்கு பெரிய அளவில் எந்த திட்டத்தையும் கொண்டுவரவில்லை என்றாலும் சமுதாய வாக்குகளும் கூட்டணிக் கட்சிகளும் முழு ஆதரவு கொடுக்கின்றன. எனவே, தேர்தல் வேலை சுணக்கமில்லாமல் நடக்கிறது.

நவாஸ்கனியை தோற்கடிக்க வேண்டும் என்பதை விட பன்னீர்செல்வத்துக்கு ஓட்டு வந்துவிடக் கூடாது என்பதே எடப்பாடி பழனிசாமியின் கவலையாக இருக்கிறது. ஆனால், ஜெயபெருமாள் அத்தனை தீவிரம் காட்டுவதாகத் தெரியவில்லை. இரட்டை இலை சின்னம் மட்டுமே இவருக்குக் கை கொடுக்கிறது.



பன்னீர்செல்வத்துக்கு அ.தி.மு.க.வினரும் ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்பது டுவிஸ்ட். பா.ஜ.க.வின் முழு ஆதரவு, நிறைய பணம் இருப்பதால் தைரியமாக களமாடுகிறார். தன்னை நிரூபிப்பதற்கு நல்ல வாக்குகள் வாங்க வேண்டும் என்பதில் பன்னீர் உறுதியாக இருக்கிறார். எனவே, இங்கு இரண்டாம் இடத்துக்கு வருகிறார் பன்னீர்.

**பஞ்ச் : பலாப்பழத்தை நசுக்கி ஏணி ஜெயிக்கிறது.**





# தேனி

## குரு சிஷ்யனுக்கு இடையில் சூப்பரான போட்டி

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வின் மானத்தைக் காப்பாற்றிய ஒரே தொகுதி தேனி. தமிழகத்தின் மொத்தமுள்ள 39 தொகுதிகளில் தேனி தொகுதியில் மட்டுமே முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மகன் ஓ.பி.ரவீந்திரநாத், 5.04 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து நின்ற தி.மு.க. கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் 4.28 லட்சம் வாக்குகள் வாங்கினார்.

கடந்த தேர்தலில் ஜெயித்த தேனி தொகுதியை டி.டி.வி.தினகரனுக்காக ஓ.பன்னீர்செல்வமும் அவரது மகன் ரவீந்திரநாத்தும் விட்டுக்கொடுக்க நேர்ந்தது தான் காலக் கொடுமை. கடந்த தேர்தலில் அ.ம.மு.க. சார்பில் போட்டியிட்டு 1.44 லட்சம் வாக்குகள் வாங்கிய தங்க தமிழ்ச்செல்வன் இப்போது தி.மு.க. வேட்பாளராக நிற்கிறார். அவரை எதிர்த்து பா.ஜ.க. கூட்டணியில் அ.ம.மு.க. வேட்பாளராக டி.டி.வி. தினகரன் நிற்கிறார்.

ஏற்கெனவே தேனி தொகுதியில் நின்று ஜெயித்த காரணத்தால் இந்த தொகுதியை விடாப்பிடியாக வாங்கி நிற்கிறார் தினகரன். குக்கர் சின்னத்தில் நிற்கும் தினகரன் ஜெயிக்க வேண்டுமென அவர் மனைவி அனுராதாவும் இப்போது களத்தில் இறங்கியிருக்கிறார். இவருக்காக களம் இறங்கியிருக்கும் அண்ணாமலை, 'ஜூன் 4ம் தேதிக்குப் பிறகு அ.தி.மு.க. தினகரன் வசம் வந்துவிடும்' என்று பேசியிருப்பது எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு கடும் கோபத்தை உருவாக்கியுள்ளது.

அதேநேரம் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் வி.டி.நாராயணசாமி முதன்முறையாக தேர்தலில் நிற்கிறார் என்பதால் அத்தனை வேகம் காட்ட முடியவில்லை. அ.தி.மு.க.வுக்கு இந்த தொகுதியில் உள்ள செல்வாக்கு, இரட்டை இலையின் மகிமை, நாயக்கர் சமுதாய வாக்கு, ஆர்.பி. உதயகுமார், ஃபார்வர்டு பிளாக் கட்சியின் கதிரவன் ஆகியோரை நம்பியே இருக்கிறார்.

அதேநேரம், தங்கதமிழ்செல்வன் தொகுதி மக்களுக்கு ரொம்பவே அறிமுகம். ஏற்கெனவே அ.தி.மு.க. சார்பில் ஆண்டிப்பட்டி சட்டப்பேரவை தேர்தலிலும் அ.ம.மு.க. சார்பில் தேனியிலும் போட்டியிட்டவர். கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஓ.பன்னீர்செல்வத்தை எதிர்த்து நின்று தோல்வி அடைந்தார். அதேநேரம், தொகுதியில் பெருவாரியாக உள்ள முக்குலத்தோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகளின் பலம் இவருக்குக் கைகொடுக்கிறது. அமைச்சர் மூர்த்தி இவருக்காக கடுமையாக உழைத்துவருகிறார்.



இன்றைய நிலையில் தங்கத்தமிழ்செல்வன் படு வேகமாக முன்னேறி வருகிறார். அவரை அடுத்து யார் என்பதற்குத்தான் போட்டி நடக்கிறது. டி.டி.வி.தினகரன் எப்படியும் இரண்டாவது இடத்தை பிடித்துவிட நினைக்கிறார். அப்படி நடந்துவிடக் கூடாது என்பதற்காக பணம் இறக்கவும் எடப்பாடி தயாராக இருக்கிறார். ஆகவே, சிறிய வித்தியாசத்தில் இப்போதைக்கு அ.தி.மு.க.வே இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இவர்கள் இருவரும் வாக்குகளை பிரிப்பதால் தங்கத்துக்கு வெற்றி எளிதாகிறது.

**பஞ்ச் : தங்கத்தை ஜெயிக்க வைக்கிறார் தினகரன்.**

40
தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# நீலகிரி

## சொந்தக் கட்சியிலே சூன்யம் வைக்கிறாங்க


நீலகிரி மக்களவைத் தொகுதியில் பா.ஜ.க. கூட்டணியில் மத்திய இணையமைச்சர் எல்.முருகன், தி.மு.க. சார்பில் ஆ.ராசா, அ.தி.மு.க. சார்பில் முன்னாள் சபாநாயகர் தனபாலின் மகன் லோகேஷ் தமிழ்செல்வன் ஆகியோர் களத்தில் நிற்கிறார்கள்.

நீலகிரி மக்களவைத் தொகுதியில் அடங்கியுள்ள பவானிசாகர், உதகை, கூடலூர், குன்னூர், மேட்டுப்பாளையம், அவிநாசி ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் சம பலத்தில் உள்ளன. கூடலூர், உதகை, பவானிசாகர் மற்றும் குன்னூரில் தி.மு.க. கொஞ்சம் அதிகமாகவும் மேட்டுப்பாளையம், அவிநாசி தொகுதிகளில் அ.தி.மு.க. கூடுதல் பலத்துடனும் காணப்படுகிறது.

அதேநேரம் நீலகிரி தொகுதியில் போட்டியிடும் அனைவரும் வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆ.ராசா பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்தவர். எல்.முருகன் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர். லோகேஷ் தமிழ்ச் செல்வன் சேலம் மாவட்டத்தை சேர்ந்தவர். லோகேஷ் தமிழ்ச் செல்வனுக்கு அ.தி.மு.க.வினர் போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்றாலும் இரட்டை இலைக்கு என இருக்கும் வாக்குகள் கை கொடுக்கும்.

இந்த தொகுதியை குறிவைத்து எல்.முருகன் இரண்டு ஆண்டுகளாகவே தேர்தல் பணிகள் செய்துவருகிறார். படுகர் மக்கள் மத்தியில் பா.ஜ.க.வுக்கு கணிசமான செல்வாக்கு இருப்பதாக நம்புகின்றனர். பா.ஜ.க.வில் பணம் விளையாடுகிறது என்றாலும் முக்கிய நிர்வாகிகள் அண்ணமலைக்கு வேலை செய்கிறார்களே தவிர, எல்.முருகன் தொகுதியை யாரும் கவனிப்பதில்லை. பா.ஜ.க.வில் உள்குத்து நடப்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

கடந்த 2019 தேர்தலில் ஆ.ராசா 5.47 லட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அ.தி.மு.க. வேட்பாளர் தியாகராஜன் 3.42 லட்சம் வாக்குகள் பெற்றார். மக்கள் நீதி மய்யத்தின் சார்பில் களம் கண்ட ராஜேந்திரன் 41 ஆயிரம் வாக்குகளும் அ.ம.மு.க. வேட்பாளர் ராமசாமி 40 ஆயிரம் வாக்குகளையும் பெற்றார்.



நீலகிரி தொகுதிக்கு ஆ.ராசா நன்கு அறிமுகமானவர். கட்சி நிர்வாகிகளிடம் செல்வாக்கு இருக்கிறது. எனவே, இந்த முறையும் வெற்றி நிச்சயம் என்று கடுமையாக உழைத்துவருகிறார்.

அ.தி.மு.க.வின் பாரம்பரிய வாக்குகள் நிச்சயம் லோகேஷ்க்குக் கிடைக்கும் அதேநேரம் மத்திய அமைச்சருக்கு கணிசமான வாக்குகள் பிரியும், பணம் விளையாடும் என்பதாலும் ஆ.ராசா மீண்டும் எம்.பி. ஆகிறார்.

பஞ்ச் : ராசாவுக்கு மீண்டும் பட்டாபிஷேகம்





40
தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# தர்மபுரி

## டாக்டரின் மருமகளுக்கு எக்கச்சக்க வரவேற்பு

தமிழ்நாட்டிலேயே ஜாதி ஆதிக்கம் செலுத்தும் முக்கியத் தொகுதி என்று தர்மபுரியைச் சொல்லலாம். வன்னியர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்பதால் பாட்டாளி மக்கள் கட்சி இந்த தொகுதியை தங்கள் சொந்தத் தொகுதியாகக் கருதுகிறது.


2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் வழக்கறிஞர் அ.மணி வேட்பாளராக போட்டியிடுகிறார். சிட்டிங் எம்.பி. செந்தில்குமாருக்கு ஊருக்குள் நல்ல பேர் இருந்தாலும் அரசியல் ரீதியாகவும் பண ரீதியாகவும் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. சார்பில் ஆர்.அசோகன் நிறுத்தப்பட்டுள்ளார். பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க. சார்பில் சௌமியா அன்புமணி ராமதாஸ் நிறுத்தப்பட்டுள்ளார்.

2014ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வென்ற இரண்டு தொகுதிகளில் தருமபுரியும் ஒன்று. அப்போது பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் போட்டியிட்டு அ.தி.மு.க.வை வீழ்த்தினார். 2019ம் ஆண்டு தி.மு.க. இந்த தொகுதியைக் கைப்பற்றியது. மீண்டும் அன்புமணி வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தி.மு.க வேட்பாளர் டாக்டர் செந்தில் குமார் 5.74 லட்சம் வாக்குகள் பெற்று வென்றார். அப்போது அன்புமணி ராமதாஸ் 5.04 லட்சம் வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வி அடைந்தார்.

வன்னியர்களுக்கு அடுத்ததாக ஆதி திராவிடர்கள், கொங்கு வேளாள கவுண்டர்கள் இருப்பதால் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் கணிசமான வாக்கு வங்கி உள்ளது. செந்தில்குமாரை போன்று வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற வேட்கையில் தி.மு.க.வின் வேட்பாளர் ஆ.மணி தீவிரம் காட்டுகிறார். வழக்கறிஞரான இவர் மத்திய அரசை கடுமையாக குற்றம் சாட்டி பேசி வருவதுடன் மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கான இலவசப் பேருந்துப் பயணம் போன்றவற்றை சுட்டிக்காட்டுகிறார். அதேநேரம் ஏனோ சௌமியாவுக்கு எதிராக அதிகம் பேசாமல் மௌனம் காக்கிறார். அதேநேரம், தி.மு.க.வுக்குக் கூட்டணிக் கட்சிகள் கடுமையாக உழைக்கிறார்கள்.

பா.ம.க.வின் சொந்த செல்வாக்கை நம்பி குடும்பத்துடன் களம் இறங்கியிருக்கிறார் சௌமியா அன்புமணி. சௌமியாவின் மூன்று மகள்களும் காடு, மேடுகளில் சுற்றித் திரிகிறார்கள். அன்புமணி, ராமதாஸ் என்று ஒட்டுமொத்த குடும்பமும் ஒற்றைத் தொகுதியில் தீவிரம் காட்டுகிறார்கள். சௌமியாவே களத்தில் நிற்பதால் பாட்டாளி மக்கள் கட்சியினர் போட்டி போட்டு வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவு தரும் பா.ஜ.க. மற்றும் அ.ம.மு.க.வுக்கு இங்கு செல்வாக்கு இல்லை என்பது மைனஸ்.

அ.தி.மு.க. வேட்பாளர் மருத்துவர் அசோக்கிற்கு இது முதல் தேர்தல் என்பதால் வேகம் எடுக்க முடியவில்லை. எடப்பாடி .பழனிசாமியின் பலத்தையும் இரட்டை இலையையும் மட்டுமே நம்பி நிற்கிறார். தே.மு.தி.க.வுக்கு ஓரளவு வாக்குகள் உள்ளன. எனவே, இப்போதைக்கு மணிக்கும் சௌமியாவுக்கும் இடையிலான போட்டியாகவே தொகுதி மாறியிருக்கிறது.



முதன்முறையாக பா.ம.க.வினர் பணம் இறக்கப்போவதாக தெரிவித்து நிர்வாகிகளுக்கு உற்சாகம் ஊட்டி வருகிறார்கள். அ.தி.மு.க.வினர் இன்னமும் பணம் செலவழிப்பது உறுதியாகவில்லை. மணியும் இந்த விவகாரத்தில் தாராளம் காட்டுவார்.

கடுமையான போட்டி நிலவுகிறது என்றாலும் மருத்துவர் அசோக் கடைசி நேரத்தில் கொஞ்சம் வேகம் காட்டினால் வாக்குகளைப் பிரித்துவிடுவார். இதனால், மணிக்கு தொகுதி நிச்சயம்.

பஞ்ச் : கடும் போட்டி

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# பொள்ளாச்சி

## இரண்டு பக்கமும் இழுபறி


அ.தி.மு.க.வின் கோட்டை என்று கருதப்படும் பொள்ளாச்சி தொகுதியில் தி.மு.க. சார்பில் ஈஸ்வரசாமி, அ.தி.மு.க. சார்பில் அ.கார்த்திகேயன் என்ற அப்புசாமியும் பா.ஜ.க. சார்பில் கோவை தெற்கு மாவட்டத் தலைவர் கே.வசந்தராஜனும் களத்தில் மல்லுக்கட்டுகிறார்கள்.

இங்கு தி.மு.க.வின் சிட்டிங் எம்.பி. சண்முகசுந்தரம் மீது பெரிய குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை என்றாலும் அதிரடி அரசியல் செய்யவில்லை என்பதால் புதிய வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். அமைச்சர் சக்கரபாணியின் ஆலோசனையின் பேரில் நிறுத்தப்பட்டுள்ள ஈஸ்வரசாமி நல்ல உழைப்பாளி என கட்சிக்குள்ளே நல்ல பேர் இருக்கிறது.

பொள்ளாச்சி தொகுதிக்குள் வரும் ஆறு சட்டமன்றத் தொகுதிகளான தொண்டாமுத்தூர் (எஸ்.பி.வேலுமணி), கிணத்துக்கடவு (அ.தி.மு.க.), பொள்ளாச்சி (அ.தி.மு.க.), வால்பாறை (தனி) (அ.தி.மு.க.), உடுமலைப் பேட்டை (அ.தி.மு.க.), மடத்துக்குளம் (அ.தி.மு.க.) எல்லாமே அ.தி.மு.க.வின் வசமே உள்ளது. ஆனால், இப்போது நிறைய நிர்வாகிகள் தி.மு.க.விடம் விலை போய்விட்டனர் என்பது தான் சோகம்.

மடத்துக்குளம் எம்.எல்.ஏ. மகேந்திரனின் அக்கா மகனே அ.தி.மு.க. வேட்பாளர் கார்த்திகேயன். என்றாலும் இவர் வேலுமணியின் சாய்ஸ் இல்லை. இப்போது எஸ்.பி.வேலுமணி, உடுமலை ராதாகிருஷ்ணன் பொள்ளாச்சி ஜெயராமன் போன்றோர் தங்கள் பலத்தைக் காட்டியே ஆகவேண்டும் என்று தீவிரமாக உழைத்துவருகிறார்கள்.

பா.ஜ.க. வேட்பாளர் வசந்தராஜனுக்கு சமூகப்பணி செய்த வகையில் நல்ல பேர் இருக்கிறது என்றாலும் டெபாசிட் வாங்குவதே கடினம். ஆகவே, தொகுதியில் இப்போது தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் கடுமையாக மல்லுக்கட்டுகிறார்கள்.



2019 தேர்தலில் தி.மு.க வேட்பாளர் சண்முகசுந்தரம், அதிமுக வேட்பாளரான சி. மகேந்திரனை 1.75 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். மக்கள் நீதி மய்யம் 59 ஆயிரம் வாக்குகளும் நாம் தமிழர் 31 ஆயிரம் வாக்குகளும் பெற்றனர்.

பா.ஜ.க. பிரிக்கும் வாக்குகள் காரணமாகவே இங்கு தி.மு.க. வெற்றி பெறுகிறது. இந்த தொகுதியை சிவப்பு மையினால் தி.மு.க. தலைமை குறித்து வைத்திருப்பதால், கடைசி நேரத்தில் பணம் விளையாடும். அ.தி.மு.க.வும் சளைக்காமல் பணம் இறக்கலாம்.

பஞ்ச் : கட்டா குஸ்தி மோதல்



40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# வேலூர்

## வில்லங்கம் பிடிச்ச வேட்பாளர்

கண்டிப்பாக இந்த முறை கதிர் ஆனந்துக்கு சீட் கொடுக்க மாட்டார்கள் என்றுதான் உடன்பிறப்புகள் அத்தனை பேரும் நினைத்தார்கள். யார் என்ன நினைத்தால் என்ன, நாங்கள் கொடுக்கத்தான் செய்வோம் என்று மீண்டும் துரை முருகனின் மகன் கதிர் ஆனந்தை ஸ்டாலின் நிறுத்தியிருக்கிறார்.


பா.ஜ.க. கூட்டணியில் புதிய நீதிக்கட்சி நடத்திவரும் பெரும் பணமுதலை ஏ.சி.சண்முகம் தாமரை சின்னத்தில் நிற்கிறார். இவர் ஏற்கெனவே 2019ம் ஆண்டு அ.தி.மு.க. ஆதரவில் நின்றார். அந்த தேர்தலில் கதிர் ஆனந்த் 4.85 லட்சம் வாக்குகளும் ஏ.சி.சண்முகம் 4.77 லட்சம் வாக்குகளும் வாங்கினார்கள். 2019ம் ஆண்டு பணப் பட்டுவாடா காரணமாக தேர்தல் ரத்து செய்யப்பட்டு பின்னர் நடத்தப்பட்டதால் போட்டி கடுமையாக இருந்தது.

இந்த முறை கதிர் ஆனந்தை தோற்கடித்து எப்படியும் தொகுதியை வென்றே ஆகவேண்டும் என்று பா.ஜ.க.வினர் ஏ.சி.சண்முகத்துக்காக தீவிரமாக உழைக்கிறார்கள். ஆனால், கடந்த தேர்தலில் அ.தி.மு.க. வாக்குகளே சண்முகத்துக்கு பெருமளவில் கை கொடுத்தது. இந்த முறை பா.ம.க.வின் வாக்குகள் மட்டுமே உதவி செய்யும்.

இப்போது அ.தி.மு.க. சார்பில் டாக்டர் பசுபதி களத்தில் நிற்கிறார். பசுபதிக்காக முன்னாள் அமைச்சர் தம்பிதுரை, மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.கே.அப்பு ஆகியோர் தீவிரமாக செயலாற்றுகிறார்கள். எனவே, அ.தி.மு.க. வாக்கு வங்கியில் ஒரு பகுதி நிச்சயம் கிடைத்துவிடும். பசுபதியை சைலன்ட் ஆக்கும் முயற்சியில் பா.ஜ.க. ஈடுபடுவதாக சொல்லப்படுகிறது.

ஒருவேளை பசுபதி வேகத்தைக் குறைத்துக்கொண்டால் கதிர் ஆனந்துக்கும் ஏ.சி.சண்முகத்துக்குமான போட்டியாக களம் மாறிவிடும். அப்படி மாறும் பட்சத்தில் சண்முகத்தின் பணத்துக்கு ஆசைப்பட்டு இந்த தொகுதியில் தி.மு.க. நிர்வாகிகள் திசை மாறவும் வாய்ப்பு உண்டு.

அதேநேரம் இந்த தொகுதியில் இஸ்லாமியர் வாக்குகள் அதிகம் என்பதால் அது சிந்தாமல் சிதறாமல் துரைமுருகன் மகனுக்குக் கிடைத்துவிடும். தி.மு.க.வும் பா.ஜ.க.வும் நேருக்கு நேர் மோதும் சூழல் ஏற்பட்டால் மட்டுமே கதிர் ஆனந்துக்கு சிக்கல் வரும். இல்லையென்றால் கடந்த முறையை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெல்வார் கதிர் ஆனந்த்.



பஞ்ச் : அப்பனுக்கும் மகனுக்கும்
ஓட்டு போட்டுக்கிட்டே இருக்காங்க.

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# திண்டுக்கல்

## எம்.ஜி.ஆரின் கோட்டையை உடைச்சிட்டாங்க

திண்டுக்கல் ஒரு காலத்தில் எம்.ஜி.ஆரின் கோட்டையாக இருந்த தொகுதி. முதன்முதலாக திண்டுக்கல் இடைத் தேர்தலில் மாயத்தேவர் வென்று அ.தி.மு.க.வின் பலத்தைக் காட்டினார். ஆனால், இப்போது இந்த தொகுதியை திராவிடக் கட்சிகள் இரண்டுமே கை விட்டுவிட்டன.

எனவே தி.மு.க. கூட்டணி சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் மாநிலக்குழு உறுப்பினரும், திண்டுக்கல் மாவட்டச் செயலாளருமான ஆர். சச்சிதானந்தம் நிற்கிறார். அ.தி.மு.க. இங்கு நேரடியாக வேட்பாளரை நிறுத்தியிருந்தால் சரிக்கு சரி போட்டியாக இருந்திருக்கும். ஆனால், அவர்களோ தங்கள் கூட்டணியில் எஸ்.டி.பி.ஐ. கட்சி வேட்பாளர் நெல்லை முபாரக்கிற்கு ஒதுக்கிவிட்டனர். பா.ஜ.க. கூட்டணியிலும் இந்த தொகுதி பா.ம.க.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், திலகபாமா போட்டியிடுகிறார்.

கடந்த முறை திமுக வேட்பாளர் ப.வேலுச்சாமி 7.46 லட்சம் வாக்குகள் பெற்று 5 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தமிழகத்தில் முதலிடம் பெற்றார். எனவே இந்த முறையில் அதனை காப்பாற்றுவதற்கு அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, சக்கரபாணி ஆகியோர் களமிறங்கி தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எஸ்.டி.பி.ஐ. வேட்பாளருக்கு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சி.சீனிவாசன், நத்தம் ஆர்.விசுவநாதன் ஆகியோர் வேலை பார்த்து வந்தாலும், நெல்லை முபாரக் என்று வெளியூர் வேட்பாளர் முத்திரை பெரும் இடையூறாக இருக்கிறது. மேலும் அ.தி.மு.க.வின் கூட்டணிக் கட்சியான தே.மு.தி.க.வுக்கு இங்கு ஓட்டுகள் இல்லை. இரட்டை இலை மட்டுமே பலமாக இருக்கிறது.



பா.ம.க. வேட்பாளர் ம.திலகபாமா கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தவர். கடந்த மக்களவைத் தேர்தலில் வாக்கு வங்கியுள்ள அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. சார்பில் போட்டியிட்ட ஜோதிமுத்து 2.07 லட்சம் வாக்குகளே பெற்றார். இந்த முறை இது கிடைத்தாலே பெரிது என்று போட்டியிடுகிறார்.

அமைச்சர்களின் ஓட்டு வேட்டையால் மீண்டும் ஒரு மாபெரும் வெற்றிக்குத் தயாராகிறது திண்டுக்கல்.

பஞ்ச் : கூட்டணியால் சிலிர்க்கிறது கம்யூனிஸ்ட்



40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

## அரக்கோணம்: சொல்லி அடிக்கிற கில்லி

எத்தனை முறை ஜெயித்தாலும் சலிப்பதில்லை என்பது தி.மு.க. பெரும் புள்ளிகளுக்கு ரொம்பவே பொருந்தும். ஒரு தொகுதியில் ஒரே நபரை மீண்டும் மீண்டும் நிறுத்திக்கொண்டே இருப்பார்கள். அவரும் ஜெயித்துக்கொண்டே இருப்பார். அப்படியொரு தொகுதி அரக்கோணம். அரக்கோணம் தொகுதியில் வன்னியர்கள், பட்டியலினத்தவர் கள், முதலியார்கள் மற்றும் நாயுடு சமூகத்தினர் அதிகமாக உள்ளனர். தி.மு.க. சார்பில் 4வது முறையாக ஜெகத்ரட் சகனுக்கு சீட் கொடுக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. சார்பில் ஏ.எல்.விஜயனும் பா.ம.க. சார்பில் வழக்கறிஞர் பாலுவும் நிற்கிறார்கள். கடந்த தேர்தலில் ஜெகத்ரட்சகன் 6.72 லட்சம் வாக்குகளும் பா.ம.க.வின் ஏ.கே.மூர்த்தி 3.43 லட்சம் வாக்குகளும் பெற்றனர்.தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க. ஆகிய மூன்று கட்சிகளுக்கும் வலுவான வாக்கு வங்கி இருக்கிறது. கல்வித் தந்தை என்றும் தொழிலதிபர் என்றும் சொல்லிக்கொள்ளும் ஜெக்ரட்சகன் தொகுதிக்கு நிறையவே செய்திருப்பதாகச் சொல்லி வாக்கு கேட்கிறார். மக்களும் அவர் சொல்வதை அப்படியே நம்புகிறார்கள். பணம் வழக்கம் போல் நிறையவே விளையாடும். எனவே, இந்த மும்முனைப் போட்டியில் ஜெகத்ரட்சகன் கடந்த தேர்தலை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுகிறார்.

பஞ்ச் : ஜெகத்துக்கு ஜே ஜே

## காஞ்சிபுரம் (தனி): கூரையை பிச்சிக்கிட்டு செல்வம் கொட்டுது.

காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், அ.தி.மு.க. சார்பில் பெரும்பாக்கம் இராஜசேகர், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் ஜோதி வெங்கடேசன் ஆகியோர் களத்தில் உள்ளனர். கடந்த 2014 தேர்தலில் நின்று தோற்றுப்போன செல்வம், 2019 தேர்தலில் போட்டியிட்டு 6.84 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அ.தி.மு.க.வின் மரகதம் 3.97 லட்சம் வாக்குகளும் பெற்று தோல்வி அடைந்தார்.

இப்போது தி.மு.க.வுக்கு கூட்டணி பலம் கை கொடுக்கிறது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு ஏரியாவில் செல்வாக்கு இருப்பதால் அந்த வாக்கு வங்கி அப்படியே செல்வத்துக்கு வருகிறது. அதோடு தொகுதியில் மூன்றாவது முறையாக களத்தில் நிற்பதால் மக்களிடம் நிறையவே அறிமுகம் இருக்கிறது. அ.தி.மு.க. வேட்பாளராக களம் இறங்கியிருக்கும் பெரும்பாக்கம் இராஜசேகர் தேர்தல் களத்திற்குப் புதிது. அ.தி.மு.க.வில் நீண்ட காலம் பணியாற்றியவர் என்றாலும் கூட்டணிக்கு போதிய பலம் இல்லை. இங்கு தே.மு.தி.க.வுக்கு குறிப்பிட்ட வாக்கு வங்கி இல்லை.

அதேநேரம் பா.ம.க.வுக்கு ஓரளவு வாக்கு வங்கி இருக்கிறது என்பதால் ஜோதி வெங்கடேசனுக்கும் செல்வாக்கு இருக்கிறது. பா.ஜ.க.வுக்கும் அ.ம.மு.க.வுக்கும் வாக்கு வங்கி அதிகம் இல்லை என்றாலும் ஜோதி வெங்கடேசன் குறிப்பிட்ட வாக்குகளைப் பிரிக்கிறார். பெரும்பாக்கம் இராஜசேகருக்கு இரட்டை இலை வாக்குகள் நிச்சயம் விழுந்தே தீரும். இரண்டு பக்கமும் வாக்குகள் பிரிவதால் மிக எளிதாக வெற்றிக்கொடி நாட்டுகிறார் செல்வம்.

பஞ்ச் : கூடுதல் வித்தியாசத்தில் வெல்கிறார் செல்வம்.

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

## மயிலாடுதுறை:
## புதிய வேட்பாளருக்கு ஜே

மயிலாடுதுறை தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ஆர்.சுதா, அ.தி.மு.க. சார்பில் பி.பாபு, பா.ம.க. சார்பில் ம.க.ஸ்டாலின், நாம் தமிழர் சார்பில் பி.காளியம்மாள் என நான்கு முனைப் போட்டி நிலவுகிறது. காங்கிரஸ் கட்சிக்கு சாதகமான தொகுதி இது. காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.சுதாவுக்கு தேர்தல் அரசியல் புதிது என்பதால், அவருக்காக தி.மு.க. தீவிரமாக பணியாற்றுகிறது. சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞராகவும், தமிழக மகளிர் காங்கிரஸ் தலைவராகவும் இருக்கும் சுதாவுக்கு அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மெய்யநாதன் உள்ளிட்டோர் கை கொடுக்கிறார்கள். அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் பி.பாபுவும் தேர்தல் களத்துக்கு புதியவர். இவர், மயிலாடுதுறை மாவட்ட அ.தி.மு.க செயலாளர் எஸ்.பவுன்ராஜின் மகன். இவருக்கு ஆதரவாக அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியன், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா உள்ளிட்டோர் தீவிரமாக உழைக்கிறார்கள். பா.ம.க. சார்பில் போட்டியிடும் ம.க.ஸ்டாலினுக்கு ஏரியாவில் ஓரளவு செல்வாக்கு உள்ளது. சொந்த வாக்கு வங்கி மற்றும் பா.ஜ.க.வின் பண பலத்தை நம்பி களம் இறங்கியிருக்கிறார். கடந்த தேர்தலில் இங்கு போட்டியிட்ட தி.மு.க.வின் ராமலிங்கம் 5.99 லட்சம் வாக்குகள் பெற்று ஜெயிக்க அ.தி.மு.க.வின் ஆசை மணி 3.37 லட்சம் வாக்கு களே பெற்றார். இந்த முறை நாம் தமிழர் கட்சியின் காளியம்மாள் இங்கு களம் காண்கிறார். இவர் ஏற்கெனவே வட சென்னை மக்களவைத் தொகுதியிலும், பூம்புகார் சட்டப்பேரவைத் தொகுதியிலும் போட்டியிட்டவர். அனைத்து கட்சிகளையும் விமர்சனம் செய்து வாக்கு சேகரித்து வருகிறார். அ.தி.மு.க. வாக்குகளும் பா.ம.க.வின் வாக்குகளும் கணிசமாகப் பிரிவதால் சுதாவுக்கு வெற்றி எளிதாகிறது.

பஞ்ச் : கூட்டணி பலத்தில் மிரட்டுகிறது கை.

## திருவண்ணாமலை:
## ஆன்மிக பூமியில் அண்ணாதுரை

தி.மு.க.வில் மீண்டும் சிட்டிங் எம்.பி.யான சி.என்.அண்ணாதுரை போட்டியில் இறங்கியிருக்கிறார். கடந்த 2019 தேர்தலில் அண்ணாதுரை 6.66 லட்சம் வாக்குகளும் அக்ரி. கிருஷ்ணமூர்த்தி 3.62 லட்சம் வாக்குகளும் பெற்றனர். இந்த முறை அண்ணாதுரைக்குப் போட்டியாக அ.தி.மு.க.வில் கலியபெருமாளும் பா.ஜ.க.வில் வழக்கறிஞர் அஸ்வத்தாமனும் நிற்கிறார்கள். அக்ரி கிருஷ்ணமூர்த்தியின் ஆசிர்வாதம் பெற்ற வேட்பாளர் கலியபெருமாள். தான் நிற்காமல் தன்னுடைய சிஷ்யப்பிள்ளையை களத்தில் இறக்கியுள்ளார் கிருஷ்ணமூர்த்தி. வன்னியர் சமூகம் என்பதால் வாக்குகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார். அதோடு மாஜி அமைச்சர் ராமச்சந்திரனும் அக்ரி கிருஷ்ணமூர்த்தியும் தங்கள் பலத்தைக் காட்ட கடுமையாக உழைக்கிறார்கள். கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அஸ்வத்தாமன் இங்கு நிறுத்தப்பட்டிருப்பது பா.ஜ.க.வினரிடையே அதிருப்தி ஏற்படுத்தியிருக்கிறது. திருவள்ளுவர் சிலைக்கு குங்குமம் பூசி சர்ச்சையை ஆரம்பித்தே பிரசாரத்தைத் தொடங்கினார். இவருக்கு கட்சியின் மூத்த நிர்வாகிகள் யாரும் தீவிர வேட்டைக்கு களம் இறங்கவில்லை என்பது மைனஸ். பா.ம.க.வின் வன்னியர் வாக்குகள் விழுந்தால் மட்டுமே இவரால் டெபாசிட் வாங்க முடியும். இங்கு பா.ஜ.க.வுக்கு என்று தனி வாக்குவங்கி இல்லை. சிட்டிங் எம்.பி என்பதால் சி.என்.அண்ணாதுரைக்கு தொகுதி முழுவதும் அறிமுகம் உண்டு. திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து சட்டம்னறத் தொகுதிகளிலும் தி.மு.க.வே வெற்றி பெற்றுள்ளது. அமைச்சர் எ.வ.வேலு கூடுதல் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். அதற்காக பணம் இறக்கவும் ரெடியாக இருப்பதால் அண்ணாதுரைக்கு யோகம் அடிக்கிறது.

பஞ்ச் : வேலு இருக்க பயம் எதற்கு



40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# ஆரணி

## தரணிக்கு வெற்றிப் பரணி

ஆரணி தொகுதியில் வன்னியர்கள், முதலியார்கள், யாதவர்கள், சிறுபான்மையினர் அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர். இந்த முறை ஆளும் தி.மு.க.வும் எதிர்க்கட்சி அ.தி.மு.க.வும், எடப்பாடிக்கு எதிராக பேசிவரும் பா.ம.க.வும் களம் காண்பதால் ஏரியாவில் ரொம்பவே அனல் அடிக்கிறது.

இந்த தொகுதி உருவாக்கப்பட்டு இதுவரை மூன்று தேர்தல்களே நடந்துள்ளன. 2009 தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் எம்.கிருஷ்ணசாமி 3.96 லட்சம் வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் 2.89 லட்சம் வாக்குகளும் பெற்றனர்.

அடுத்து நடந்த 2014 தேர்தலில் அ.தி.மு.க. தனித்துப் போட்டியிட்டு அ.தி.மு.க.வின் செஞ்சி ஏழுமலை 5.02 லட்சம் வாக்குகள் வாங்கி ஜெயித்தார். தி.மு.க. சார்பில் போட்டியிட்ட சிவானந்தம் 2.58 லட்சம் வாக்குகளும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்ட ஏ.கே.மூர்த்தி 2.53 லட்சம் வாக்குகளும் பெற்றார். அப்போது காங்கிரஸ் கட்சியில் விஷ்ணுபிரசாத் 27 ஆயிரம் வாக்குகள் மட்டுமே பெற்றார்.

கடந்த 2019 தேர்தலில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விஷ்ணுபிரசாத் 6.17 லட்சம் வாக்குகளும் அ.தி.மு.க.வின் ஏழுமலை 3.86 லட்சம் வாக்குகளும் அ.தி.மு.க.வின் செந்தமிழன் 46 ஆயிரம் வாக்குகளும் வாங்கினார்கள். இந்த முடிவுகளில் இருந்து அ.தி.மு.க., தி.மு.க. மற்றும் பா.ம.க. ஆகிய மூன்று கட்சிகளுக்கும் தனித்த ஓட்டு வங்கி இருப்பது உறுதியாகிறது.

இந்த முறை காங்கிரஸ் கட்சியிடம் இருந்து தொகுதியை வாங்கியிருக்கும் தி.மு.க.வின் வேட்பாளராக தரணிவேந்தன் நிற்கிறார். அ.தி.மு.க.வில் கஜேந்திரனும் பா.ம.க.வில் கணேஷ்குமாரும் மோதுகிறார்கள். மூவருமே புதுமுகம் என்ற அளவிலே களத்தில் நிற்கிறார்கள்.

விஷ்ணுபிரசாத் மீது மக்களுக்கு அதிருப்தி என்ற காரணத்தால் தி.மு.க. நேரடியாக களம் காண்கிறது. எனவே தி.மு.க. நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் அதிக உற்சாகத்துடன் பணியாற்றிவருகிறார்கள். அமைச்சர் எ.வ.வேலு கை கொடுக்கிறார். 2014ம் ஆண்டு அ.தி.மு.க. வெற்றி பெற்ற தொகுதி என்பதால் கஜேந்திரனுக்கு ஆதரவாக மாஜி அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தூசி மோகன் ஆகியோர் பலம் காட்டி வருகிறார்கள்.



பா.ம.க.வுக்கும் இங்கு தனி செல்வாக்கு இருப்பதால் கணேஷ்குமாரும் தீவிர வேட்டையாடி வருகிறார். அதேநேரம் இங்கு பா.ஜ.க.வுக்கும் அ.ம.மு.க.வுக்கும் அதிக ஆதரவு இல்லை என்பது மைனஸ். அதேநேரம் பா.ம.க.வுக்கு நிச்சய வாக்குகள் வந்து சேர்கிறது. மும்முனைப் போட்டி என்பதால் நோகாமல் வெற்றி பெறுகிறார் தரணி வேந்தன்.

பஞ்ச் : தி.மு.க.வுக்கு லக்கி பிரைஸ்.

40
தொகுதிகளுக்கும்
பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# கள்ளக்குறிச்சி

## பொன்முடி மகனுக்கு ஒரு கும்பிடு

தி.மு.க.வின் கோட்டையாகத் திகழும் கள்ளக்குறிச்சியில் கடைசியாக நடந்த ஐந்து தேர்தல்களில் நான்கு முறை தி.மு.க.வும் ஒரே ஒரு முறை அ.தி.மு.க.வும் வென்றுள்ளன.

கடந்த 2019 தேர்தலில் இங்கு அமைச்சர் பொன்முடியின் மகன் டாக்டர் கௌதம சிகாமணி 7.21 லட்சம் வாக்குகள் வாங்கி கிட்டத்தட்ட 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பொன்முடி மீதும் கௌதம சிகாமணி மீதும் இருக்கும் அதிருப்தி காரணமாகவே தி.மு.க.வில் மலையரசனுக்கு சீட்டு கொடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்குப் புதியவர் என்றாலும் கூட்டணிக் கட்சியை அனுசரித்துப் போகிறார். கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயனின் சாய்ஸ் மலையரசன். இவனே இவருக்காக கார்த்திகேயன் கணக்குப் போட்டு உழைக்கிறார். உதயசூரியன் எம்.எல்.ஏ.வும் கை கொடுக்கிறார். இங்கு ஆதிதிராவிடர் வாக்குகள் அதிகம் என்பதால் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள், காங்கிரஸ் கட்சியினரும் துணை நிற்கிறார்கள்.

அ.தி.மு.க. கூட்டணியில் மாவட்டச் செயலாளர் ரா.குமரகுரு நிற்கிறார். இவர் உளுந்தூர்ப்பேட்டை சட்டப்பேரவை தொகுதியில் நின்று மூன்று முறை வெற்றி பெற்றவர். எனவே மக்களிடம் நல்ல அறிமுகம் உள்ளது. எடப்பாடி பழனிசாமி மீதும் இரட்டை இலை மீதுமுள்ள நம்பிக்கையில் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். நிறைய பணம் இருந்தாலும் நிர்வாகிகளை பக்கத்தில் நெருங்கவிடாமல் விரட்டுவதால் அனைவரும் தள்ளியே நிற்கிறார்கள். தே.மு.தி.க.வுக்கு ஓரளவு வாக்குகள் உள்ளதால் அவர்களும் புரட்சி பாரதம் கட்சியினரும் களத்தில் நிற்கிறார்கள்.

பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க. நிற்கிறது. காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான சேலம் ராமசாமி உடையாரின் மகனும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் எம்.பியாக இருந்தவருமான தேவதாஸ் போட்டியிடுகிறார். இவருக்கும் கணிசமான வாக்குகள் விழும் வாய்ப்பு உள்ளது.



தி.மு.க.வின் மலையரசனுக்கும் அ.தி.மு.க.வின் குமரகுருவுக்குமே போட்டி என்றாலும் தேவதாஸ் உள்ளே நுழைந்து கணிசமான வாக்குகளைப் பிரிப்பதால் எளிதாக எம்.பி. பதவியைப் பிடிக்கிறார்.

**பஞ்ச் : மலைக்கு மேல் ஏறி நிற்கிறார் மலையரசன்.**





40
தொகுதிகளுக்கும்
பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# தஞ்சாவூர்

## பழனிமாணிக்கத்திடம் இருந்து தி.மு.க.வுக்கு விடுதலை


ஆரம்ப காலத்தில் காங்கிரஸ் கட்சியின் பிடியிலிருந்த தஞ்சாவூர், இப்போது தி.மு.க.வின் கையில் இருக்கிறது. இந்த தொகுதியில் தி.மு.க.வின் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் 6 முறை எம்.பி.யாக பதவி வகித்திருக்கிறார். இந்த முறையும் பழனிமாணிக்கத்திற்கே வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தி.மு.க. வேட்பாளராக முரசொலி நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்த தொகுதியில் முக்குலத்தோர், முத்திரையர், தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். இந்த நாடாளுமன்றத் தொகுதிக்குள் வரும் 6 சட்டமன்றத் தொகுதிகளில் ஐந்தில் தி.மு.க.வும் ஒன்றில் ஓ.பி.எஸ். ஆதரவாளரான ஆர்.வைத்திலிங்கம் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 2019 தேர்தலில் பழனிமாணிக்கம் 5.88 லட்சம் வாக்குகளும் எதிர்த்து நின்ற த.மா.கா.வேட்பாளர் என்.ஆர்.நடராஜன் 2.20 லட்சம் வாக்குகளும் பெற்றனர். இங்கு அ.ம.மு.க. வேட்பாளர் 1 லட்சம் வாக்குகள் பெற்றுள்ளார்.

இந்த முறை பழனிமாணிக்கத்துக்குப் பதிலாக புதுமுகமான வழக்கறிஞர் 'தென்னங்குடி' முரசொலி நிறுத்தப்பட்டுள்ளார். பழனிமாணிக்கத்திற்கு பொதுமக்களிடம் அதிருப்தி இல்லை என்றாலும் கட்சிக்குள் ஏகப்பட்ட உட்கட்சி பூசல் இருந்த காரணத்தாலே தென்னங்குடியை கிராமத்தைச் சேர்ந்த முரசொலி நிறுத்தப்பட்டுள்ளார். பல தலைமுறையாக தி.மு.க. குடும்பம் என்பது பிளஸ் பாயிண்ட்.

அ.தி.மு.க. கூட்டணியில் இந்த தொகுதி தே.மு.தி.க.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு தே.மு.தி.க.வின் சிவநேசன் களத்தில் நிற்கிறார். விஜயகாந்த் மீதான அபிமான ஓட்டையும் எடப்பாடி பழனிசாமி மீதான நம்பிக்கையிலும் நம்பி களத்தில் நிற்கிறார்.



பா.ஜ.க. சார்பில் மாநில பொதுச்செயலாளரான கருப்பு முருகானந்தம் நிற்கிறார். 2014 பொதுத் தேர்தலில் இவர் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்டு 58 ஆயிரம் வாக்குகள் மட்டுமே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறை மோடி, அண்ணாமலை ஆதரவுடன் களத்தில் நிற்கிறார். தினகரன் சமுதாய வாக்குகள் கிடைத்தாலும் டெபாசிட் வாங்குவது சிரமமே.

**பஞ்ச் : சூரியனுக்கு தகதக வெற்றி**

## மாம்பழ நிர்வாகிகளின் டபுள் ஆக்ட்

காங்கிரஸ் கட்சிக்கு சாதகமான தொகுதிகளில் ஒன்று கடலூர். இங்கு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன், மாஜி அமைச்சர் பூவராகன், கே.எஸ்.அழகிரி போன்ற பலர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். கடந்த 2019 தேர்தலில் இங்கு போட்டியிட்ட தி.மு.க.வின் ரமேஷ் 5.22 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ம.க. வேட்பாளர் 3.78 லட்சம் வாக்குகள் மட்டுமே பெற்றார்.

சிட்டிங் எம்.பி.யான ரமேஷ் மீது எக்கச்சக்க குற்றச்சாட்டுகள் வந்த காரணத்தால் தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு தி.மு.க. தாரை வார்த்தது. காங்கிரஸ் கட்சி சார்பில் விஷ்ணு பிரசாத் நிற்கிறார். இவர் முன்னாள் காங்கிரஸ் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமியின் மகன் என்பதும் அன்புமணி ராமதாஸின் மைத்துனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது ஆரணி தொகுதி எம்.பி.யாக இருக்கும் விஷ்ணுபிரசாத் இந்த முறை இங்கு வந்து போட்டியிடுகிறார். வன்னியர் என்பதால் பலமான வாக்கு பலம் உதவுகிறது.

இந்த தொகுதியை அ.தி.மு.க. கூட்டணி தே.மு.தி.க.வுக்குக் கொடுத்துள்ளது. விஜயகாந்த் சட்சி சார்பில் சிவக்கொழுந்து போட்டியிடுகிறார். இவருக்கு இரட்டை இலை ஓரளவுக்கு வாக்குகள் பெற்றுத்தரும் என்றாலும் வெற்றிக்கான இலக்கு சாத்தியமில்லை. 2014ம் ஆண்டு இங்கு அ.தி.மு.க.வின் அருண்மொழி நல்ல வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என்றாலும், இவருக்கு பணம் செலவழிக்கவும் உழைப்பதற்கும் அ.தி.மு.க.வினர் யாரும் தயாராக இல்லை.

பா.ஜ.க. கூட்டணி சார்பில் பா.ம.க.வுக்கு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் சார்பில் திரைப்பட இயக்குனரான தங்கர் பச்சான் நிறுத்தப்பட்டுள்ளார். என்னுடைய மைத்துனர் ஜெயிக்க வேண்டியது முக்கியமில்லை, மாம்பழம் ஜெயிக்க வேண்டும் என்று அன்புமணி வெளிப்படையாகப் பேசியிருக்கிறார் என்றாலும் பா.ம.க. நிர்வாகிகள் நிறைய பேர் விஷ்ணு பிரசாத்துக்கு ஆதரவாக நிற்கிறார்கள், அதை மேலிடமும் அனுமதிக்கிறது என்பதே உண்மை.



ஆனாலும் தன்னை நிரூபிப்பதற்கு தங்கர்பச்சான் தீவிரமாக ஓட்டு வேட்டை நடத்துகிறார் என்றாலும் இரண்டாவது இடத்துக்கே சிரமப்பட வேண்டியிருக்கும். எனவே, விஷ்ணு பிரசாத்துக்கு மீண்டும் ஒரு சக்சஸ்.

**பஞ்ச் : மாம்பழத்தின் உள்குத்துகளால் ஜொலிக்கிறது கை.**





## ஜோதிமணிக்கு எத்தனை குடைச்சல்கள்

ஜோதிமணிக்கு மட்டும் சீட் வாங்கிக் குடுத்துடாதீங்க என்று சிறையில் இருந்து செந்தில்பாலாஜி கேட்டுக்கொண்ட பிறகும், கரூர் தொகுதியை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கவேண்டிய நிலை ஸ்டாலினுக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே, மீண்டும் ஜோதிமணி வேட்பாளராக வந்திருக்கிறார். அவரை ஜெயிக்க வைக்க வேண்டிய பொறுப்பும் ஸ்டாலினுக்கு வந்துவிட்டது.

கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் திமு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்ட ஜோதிமணி 6.95 லட்சம் வாக்குகள் வாங்கி மாபெரும் வெற்றி பெற்றார். அப்போது அ.தி.மு.க.வின் தம்பிதுரையால் 2.75 லட்சம் வாக்குகள் மட்டுமே வாங்க முடிந்தது. இதற்கு காரணம் செந்தில் பாலாஜியின் தேர்தல் வித்தை.

அதன் பிறகான சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு செந்தில் பாலாஜியுடன் ஜோதி மணிக்கு உரசல் ஏற்பட்டது. அதோடு லோக்கல் காங்கிரஸ் கட்சியினருடனும் மோதல் ஏற்பட்டது. எனவே, 2024 மக்களவைத் தேர்தலில் கரூர் தொகுதியில் தி.மு.க.வே போட்டியிட வேண்டும் என உடன்பிறப்புகள் ஆசைப்பட்டனர். காங்கிரஸ் கட்சியினரும் ஜோதிமணிக்கு சீட் தராதீங்க என்று கெஞ்சிப் பார்த்தனர்.

ஆனால் சோனியா காந்தி, ராகுல் காந்தியின் குட் புக்கில் இருக்கும் ஜோதிமணி மீண்டும் சீட் வாங்கிவிட்டார். அதோடு ஜோதிமணியை ஜெயிக்க வைச்சுடுங்க என்று சக்கரபாணி, அப்துல்லாவுக்கு ஸ்டாலின் உத்தரவும் போட்டிருக்கிறார். இதையடுத்து சுணங்கிக்கிடந்த தி.மு.க.வினர் இப்போது தீவிரமாக பணியாற்றி வருகிறார்கள்.

இந்த முறை இவருக்கு எதிராக தம்பிதுரை நின்றிருந்தால் போட்டி கடுமையாக இருந்திருக்கும். ஆனால், அ.தி.மு.க. சார்பில் புதுமுகமாக அருண் டெக்ஸ் தங்கவேலு நிறுத்தப்பட்டிருக்கிறார். கரூர் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளராக இருக்கும் தங்கவேலு கொங்கு வெள்ளாளர் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால், சமுதாய வாக்குகள் மீதான நம்பிக்கையில் இருக்கிறார். இவருக்காக முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் தீவிரம் காட்டி வருகிறார்.

பா.ஜ.க. சார்பில் அண்ணாமலை இங்கு போட்டியிடுவார் என்று எண்ணப்பட்ட நிலையில், செந்தில்நாதன் நிறுத்தப்பட்டுள்ளார். அ.தி.மு.க.வில் முக்கிய பொறுப்பில் இருந்த செந்தில்நாதன் 2011, 2019 அரவக்குறிச்சி சட்டசபை தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர். தற்போது பா.ஜ.க.வில் சேர்ந்தபிறகு எம்.பி. தொகுதி கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே போட்டியிட்ட அனுபவம் உள்ள காரணத்தாலும் அண்ணாமலை செல்வாக்கை நம்பியும் தீவிரமாக ஓட்டு வேட்டை நடத்துகிறார்.



கரூரில் ஜோதிமணிக்கு காங்கிரஸ் மற்றும் தி.மு.க. கட்சிக்குள் எக்கச்சக்க குடைச்சல் இருந்தாலும் தங்கவேலுவும் செந்தில் நாதனுக்கு ஆளுக்கு கொஞ்சம் வாக்குகளை பிரித்துக்கொள்வதால் மீண்டும் வெற்றி வாகை சூடுகிறார் ஜோதிமணி.

**பஞ்ச் : செந்தில்பாலாஜி இல்லாமலும் ஜெயிக்கிறார் ஜோதிமணி.**

40
தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# நாகப்பட்டினம் (தனி)

## போட்டிக்கு வேற ஆளே கிடைக்கலையா

நாகை தொகுதியில் இதுவரை ஏழு முறை கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ், தி.மு.க. கட்சிகளும் அதிக வெற்றி பெற்றுள்ளன. கடந்த 2019 தேர்தலில் இங்கு போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் எம்.செல்வராஜ் 5.22 லட்சம் வாக்குகள் பெற்று ஜெயித்தார். அடுத்துவந்த அ.தி.மு.க. வேட்பாளர் தாழை ம. சரவணன் 3.11 லட்சம் வாக்குகள் பெற்றார்.

இந்த முறை எம்.செல்வராஜுக்குப் பதிலாக வி.செல்வராஜ் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் களத்தில் நிற்கிறார். நாகை மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும் திருவாரூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் இருந்தவர் என்பதால் மக்களுக்கு நல்ல அறிமுகம் இருக்கிறது. கூட்டணிக் கட்சிகளின் ஆதரவும் கை கொடுக்கிறது.

இவரை எதிர்த்து அ.தி.மு.க. வேட்பாளர் சுர்ஜித் சங்கர் நிற்கிறார். மாஜி அமைச்சர் ஓ.எஸ்.மணியன் பரிந்துரையால் காங்கிரஸ் கட்சியில் இருந்து அ.தி.மு.க.வில் இணைந்தவருக்கு உடனடியாக சீட்டு கொடுக்கப்பட்டதால் கட்சி நிர்வாகிகளிடம் சுணக்கம் இருக்கிறது. இன்னமும் இவரை அ.தி.மு.க.வாகவே தொண்டர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பா.ஜ.க. வேட்பாளராக எஸ்.ஜி.எம்.ரமேஷ் அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் தந்தை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அதோடு இவரது மாமனார் ஏ.கே.எஸ்.விஜயன் என்று இவருக்கு பல கட்சியினரும் சொந்தமாகவும் நெருக்கமாகவும் இருக்கிறார்கள். மோடியின் செல்வாக்கினால் குறிப்பிட்ட வாக்குகளைப் பெற்றுவிட முடியும் என்று நம்புகிறார். இவருக்காக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பரப்புரை மேற்கொண்ட பிறகும் பெரும் வரவேற்பை காண முடியவில்லை.



கடந்த 10 ஆண்டுகளில் மீனவர் பிரச்னையைத் தீர்க்க எதுவும் செய்யவில்லை என்று பா.ஜ.க. மீதும் தி.மு.க. மீதும் இங்குள்ள மீனவர்கள் கோபத்தில் இருக்கிறார்கள் என்றாலும் கம்யூனிஸ்ட் வேட்பாளருக்கு ஆதரவு தருகிறார்கள். அ.தி.மு.க. வேட்பாளரை விட பா.ஜ.க. வேட்பாளர் களத்தில் தீவிரம் காட்டுகிறார் என்றாலும் ஓரளவு வாக்குகளை மட்டுமே பிரிக்க முடியும். எனவே, எப்போதும் போல் கம்யூனிஸ்ட் கொடி கோட்டைக்குப் போகிறது.

**பஞ்ச் : கம்யூனிஸ்ட் கட்சிக்கு நாக் அவுட் வெற்றி**





40
தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# நாமக்கல்

## திடீர் வேட்பாளருக்கு நல்ல நேரம்

இந்த தொகுதியில் தி.முக. கூட்டணியில் கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி போட்டியிடும் நிலையில், சிட்டிங் எம்.பி.யான சின்ராஜுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டு சூரியமூர்த்தி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். கொங்கு கட்சியின் மாநில இளைஞரணி செயலாளரான இவர் காதல் ஆணவக் கொலைக்கு ஆதரவாகப் பேசியதாக வீடியோ திடீரென வைரலானது.

நீதிமன்றத்தில் அந்த வீடியோ நிரூபிக்கப்படவில்லை என்று சூரியமூர்த்தி சொன்னாலும் விடுதலை சிறுத்தைகள், தமிழ்ப்புலிகள், இடதுசாரி கட்சிகள் நேரடியாகவே தி.முக. தலைமையிடம் முறையிட்டன. இதன் அடிப்படையில் சூரியமூர்த்திக்குப் பதிலாக மாதேஸ்வரன் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தி.மு.க.வின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பதால் உடன்பிறப்புகள் தீயாக வேலை செய்கிறார்கள்.

இந்த தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக தமிழ்மணி களம் இறக்கப்பட்டுள்ளார். மாவட்ட வர்த்தக அணிச்செயலாளராக இருக்கும் தமிழ்மணி இரட்டை இலை சின்னத்தை மட்டுமே நம்பி களத்தில் நிற்கிறார். இதுவரை தேர்தல் களத்தில் நின்ற அனுபவம் இல்லை. மேலும், இவருக்கு ஆதரவாக பெருந்தலைகள் யாரும் இறங்கவில்லை என்பது மைனஸ்.

பா.ஜ.க. சார்பில் மாநில துணைத்தலைவர் கே.பி.ராமலிங்கம் போட்டியிடுகிறார். இவர் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர் என்றாலும் சொந்த செல்வாக்கு இல்லை. கட்சிக்குள்ளும் இவருக்கு போதிய ஆதரவு கிடையாது. பணமும் செலவழிக்க மாட்டார்.



கடந்த 2019 தேர்தலில் இங்கு வெற்றி பெற்ற சின்ராஜ் 6.29 லட்சம் வாக்குகள் வாங்கியிருந்தார். அடுத்துவந்த அ.தி.மு.க.வின் காளியப்பனால் 3.61 லட்சம் வாக்குகளே வாங்க முடிந்தது. கொங்கு வாக்குகள் இந்த முறையும் அப்படியே மாதேஸ்வரனுக்குப் போவதால் தி.மு.க. கூட்டணியே மீண்டும் ஜெயிக்கிறது.

**பஞ்ச் : அசால்ட்டாக அடிக்கிறார் மாதேஸ்**

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# திருவள்ளூர் (தனி)

## காங்கிரஸ் கட்சியில் ஒரு அண்ணாமலை

வன்னியர்கள், நாடார்கள், தாழ்த்தப்பட்டவர்கள், முதலியார்கள் அதிகமுள்ள தொகுதியான திருவள்ளூரில் கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் கணிசமாக உள்ளனர். இங்கு கடந்த 2019ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஜெயக்குமார் 7.67 லட்சம் வாக்குகள் வாங்கி ஜெயித்தார். எதிர்த்து நின்ற அ.தி.மு.க.வின் டாக்டர் வேணுகோபாலுக்கு 4.10 லட்சம் வாக்குகள் கிடைத்தன.

இப்போது திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளும் தி.மு.க. வசமே உள்ளது. ஆகவே, காங்கிரஸ் மேலிடத்தின் ஆசி பெற்ற வேட்பாளராக வந்திருக்கும் வார் ரூம் சசிகாந்த் செந்திலுக்கு சரியான போட்டி இந்த தொகுதியில் இல்லை.

ஏனென்றால் இந்த தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. சார்பில் நல்லதம்பி போட்டியிடுகிறார். இவர் முன்பு சென்னை எழும்பூர் தொகுதியில் தே.மு.தி.க. எம்.எல்.ஏ.வாக இருந்தவர். இந்த தொகுதியில் இவருக்கும் தே.மு.தி.க.வுக்கும் தனிப்பட்ட செல்வாக்கு இல்லை. எனவே அ.தி.மு.க. ஆதரவை மட்டுமே நம்பி களத்தில் நிற்கிறார்.

அதேபோல் பா.ஜ.க. சார்பில் பொன்.வி.பாலகணபதி களத்தில் இருக்கிறார். சசிகலா புஷ்பாவிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு வைரலானவர். எனவே, இவரை பார்க்கும்போதே மக்கள் சிரிக்கிறார்கள். பா.ம.க.வின் வாக்குகள் விழுந்தால் மட்டுமே இவரால் டெபாசிட் வாங்க முடியும் என்பதுவே யதார்த்தம்.

சசிகாந்த் செந்தில் தேர்தல் அரசியலுக்குப் புதிது என்றாலும் அண்ணாமலையைப் போலவே கர்நாடகத்தில் ஐ.ஏ.எஸ். பதவியில் இருந்து வெளியேறி அரசியலுக்கு வந்தவர். அதோடு காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் ஆலோசகராகப் பணியாற்றிவர் என்பதால் அனைத்து கூட்டணிக் கட்சியினரையும் அரவணைத்துச் செல்கிறார். இந்த தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் நல்ல செல்வாக்கு இருப்பதாலும் தி.மு.க.வினர் கை கொடுப்பதாலும் கூடுதல் வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்கிறார் சசிகாந்த் செந்தில்.



**பஞ்ச் : கூட்டணிகள் உபயத்தில் சசியின் கை உயர்கிறது.**



தேர்தல் 2024

40 தொகுதிகளுக்கும் பக்கா ரிப்போர்ட்

VIP தொகுதி

# விழுப்புரம் (தனி)

## புத்தகம் படிச்சுட்டு ஓட்டு போடுங்க

கடந்த முறை தி.மு.க.வின் உதயசூரியன் சின்னத்தில் நின்று வெற்றிபெற்ற விடுதலை சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் ரவிக்குமார் மீண்டும் வேட்பாளராக நிற்கிறார். கடந்த தேர்தலில் அவர் 5.59 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து நின்ற பா.ம.க.வின் வடிவேல் ராவணன் 4.31 லட்சம் வாக்குகள் பெற்றார்.

இந்த முறை ரவிக்குமார் பானை சின்னத்தில் நிற்கிறார் என்றாலும் தொகுதி மக்களுக்கு நல்ல அறிமுகம் இருக்கிறது. தொகுதிக்கு நிறையவே செய்து கொடுத்திருப்பதை புத்தகமே அச்சடித்து கொடுத்து வருகிறார். அதோடு மோடிக்கு எதிர்ப்பை அழுத்தமாகப் பதிவு செய்து வாக்கு கேட்கிறார். தி.மு.க.வின் ஒத்துழைப்பும் அமோகமாகக் கிடைக்கிறது.

இங்கு அ.தி.மு.க. வேட்பாளராக பாக்கியராஜ் அறிவிக்கப்பட்டுள்ளார். முதன்முறையாக தேர்தல் களத்திற்கு வந்திருக்கும் பாக்கியராஜ் இரட்டை இலையையும் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தையும் நம்புகிறார். பணம் புரள்வதற்கு வாய்ப்பு இல்லை. கிராமப்புறங்களில் இன்னமும் இரட்டை இலைக்கு இருக்கும் ஆதரவு குறிப்பிட்ட வாக்குகளைப் பெற்றுத்தரும்.

பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க.வின் வேட்பாளராக முரளி சங்கர் அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஏற்கெனவே அரூர், வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியர். ஆனாலும், தொகுதியில் மாம்பழம் சின்னத்துக்கு மதிப்பு இருப்பதையும் பா.ஜ.க.வின் ஆதரவையும் நம்பி நிற்கிறார்.

இவர்களைத் தாண்டி நாம் தமிழர் கட்சி சார்பில் இயக்குநர் மு.களஞ்சியம் போட்டியிடுகிறார். இவருக்காக சீமானின் தம்பிகள் எல்லா ஏரியாவிலும் பிரச்சாரம் செய்கிறார்கள். இரட்டை இலையும் மாம்பழமும் வாக்குகளை சமமாகப் பிரித்துவிடுவதால் பானைக்கு எந்த பிரச்னையும் இல்லை.



**பஞ்ச் : ரவிக்குமாருக்கு மீண்டும் ஒரு சான்ஸ்**

ஞானகுரு

தமிழ் லீடர்

நிறுவனர்

**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்

**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்

**எம்.ஜோதி**

வடிவமைப்பு

**வி.கிராபிக்ஸ்**

**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்

**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்

**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்

**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன்**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,

6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,

கொட்டிவாக்கம், சென்னை - 41.

**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 80725 89355

**இணையதளம் :** gyanaguru.com




## கிருஷ்ணகிரி: காங்கிரஸ் கோட்டைக்கு சிக்கல் இல்லை.

காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான தொகுதி கிருஷ்ணகிரி. கடந்த தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் செல்லக்குமார் 6.11 லட்சம் வாக்குகள் வாங்கி வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து நின்ற கே.பி.முனுசாமி 4.54 லட்சம் வாக்குகள் பெற்றார். தற்போது மீண்டும் தொகுதி காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக செல்லக்குமாரே அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த முறை முன்னாள் எம்.எல்.ஏ. கோபிநாத் காங்கிரஸ் வேட்பாளராக களத்தில் நிற்கிறார். இவரும் தொகுதியில் நன்கு அறிமுகமானவர், தேர்தல் அரசியல் செய்தவர் என்பதால் கூட்டணிக் கட்சிகளுடன் அனுசரித்துச் செல்கிறார். அ.தி.மு.க. சார்பில் ஓசூர் மாநகராட்சி கவுன்சிலர் ஜெயப்பிரகாஷுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர் பா.ம.க.வில் இருந்து அ.தி.மு.க.வுக்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு கே.பி.முனுசாமி வேலை செய்தாலும் பணம் செலவழிக்கத் தயாராக இல்லை. எனவே, இரட்டை இலை மட்டுமே ஓட்டு வாங்கித்தர வேண்டும். தே.மு.தி.க.வுக்கு கொஞ்சம் வாக்கு வங்கியுள்ளது. அதேபோல் பா.ஜ.க. சார்பில் சி. நரசிம்மன் களத்தில் நிற்கிறார். இவரும் காங்கிரஸ், த.மா.கா. கட்சியிலிருந்து பா.ஜ.க.வுக்கு வந்தவர். இவர் பா.ம.க. வாக்கு வங்கியை நம்பியே களத்தில் நிற்கிறார். பா.ஜ.க. முக்கியப் புள்ளிகள் இவரை கண்டுகொள்ளவில்லை என்றாலும் பணம் விளையாடுவதற்கு வாய்ப்புண்டு.



இவர்களுடன் நாம் தமிழர் கட்சி சார்பில் வீரப்பன் மகன் வித்யா ராணியும் களத்தில் நின்று சலசலப்பு காட்டுகிறார். நாம் தமிழர் கட்சி பெரிதாக வாக்குகளைப் பிரிக்காது என்றாலும் அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை வாக்குகளும் தாமரைக்கு பா.ம.க.வின் வாக்குகளும் விழுகிறது. இப்படி ஓட்டுகள் சிதறுவதால் கோபிநாத் எம்.பி. ஆகிறார்.


**பஞ்ச் : பணம் செலவழிக்காமலே ஜெயிக்கிறார் கோபி**

# புதுவை

## ரங்கசாமியின் தேர்தல் ரூட்டு

காங்கிரஸ் கட்சியின் அசைக்க முடியாத இரும்புக்கோட்டை. ஏனென்றால் காங்கிரஸ் கட்சி இங்கு நடைபெற்ற 15 தேர்தல்களில் 11 முறை வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறிய ரங்கசாமியின் என்.ஆர். காங்கிரஸ் 2014 தேர்தலில் ஒரு முறை வெற்றி பெற்றது.

கடந்த 2019 தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் வைத்திலிங்கம் 4.44 லட்சம் வாக்குகளும் எதிர்த்து நின்ற என்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர் நாராயணசாமி கேசவன் 2.47 லட்சம் வாக்குகளும் பெற்றனர். இந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் மீண்டும் சிட்டிங் எம்.பி.யான வைத்திலிங்கமே போட்டியிடுகிறார்.



அவரை எதிர்த்து என்.ஆர். காங்கிரஸ் நிற்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தொகுதியை பா.ஜ.க.வுக்கு தாரை வார்த்துவிட்டது. ஆகவே, இப்போது பா.ஜ.க. சார்பில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் களத்தில் நிற்கிறார். இவருக்கு பா.ம.க. வாக்குகளும் என்.ஆர். காங்கிரஸ் வாக்குகளும் மட்டுமே ஓரளவுக்குக் கை கொடுக்கும்.


அ.தி.மு.க. சார்பில் இளம் பெண்கள் பாசறை செயலாளர் தமிழ்வேந்தன் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு அ.தி.மு.க.வுக்கு போதிய செல்வாக்கு இல்லை என்பதால் இவரால் எந்த தாக்கமும் ஏற்படுத்த முடியாது.

ஆட்சியில் இருக்கும் என்.ஆர்.காங்கிரஸ் மீதும் அதன் கூட்டணியான பா.ஜ.க. மீதும் மக்களுக்கு ரொம்பவே அதிருப்தி இருக்கிறது. அதனாலே தொகுதியை பா.ஜ.க.வுக்கு ரங்கசாமி கொடுத்துவிட்டார் என்று ரகசியத்தை அவர் கட்சியினரே உடைக்கிறார்கள். அதேநேரம் காங்கிரஸ் கட்சிக்கு தி.மு.க.வின் வாக்குகளும் கம்யூனிஸ்ட் மற்றும் விடுதலை சிறுத்தைகள் வாக்குகள் கை கொடுக்கிறது. அமைச்சர் நமச்சிவாயத்தினால் கடும் போட்டி கொடுக்க முடியாத நிலையில் மீண்டும் ஜெயிக்கிறார் வைத்திலிங்கம்.

**பஞ்ச் : கை சின்னத்திற்கு பேராதரவு.**

### ஃபைனல் டச் :

கள நிலவரப்படி புதுவையும் சேர்த்து 38 தொகுதிகளில் தி.மு.க. ஜோராக முன்னணியில் இருக்கிறது. ஈரோடு, பொள்ளாச்சி ஆகிய இரண்டு தொகுதிகளில் மட்டுமே கடுமையான போட்டி நிலவுகிறது. கள்ளக்குறிச்சி, வேலூர் தொகுதிகளில் தி.மு.க.வை தோற்கடிக்க கடும் முயற்சிகள் நடைபெறுகிறது என்றாலும் எடுபடவில்லை. ஈரோடு, பொள்ளாச்சி தொகுதி களில் கடைசி நேரத்தில் இரண்டு பக்கமும் பணம் இறங்கும் என்றாலும் சிறிய வித்தியாசத்தில் தி.மு.க.வே ஜெயிப்பதற்கு வாய்ப்பு அதிகம். பா.ஜ.க. கூட்டணி 20 தொகுதிகளிலாவது இரண்டாவது இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயலாற்றிவருகிறது. ஆனால், பா.ஜ.க.வில் பொன்.ராதாகிருஷ்ணன், எல்.முருகன் மற்றும் கூட்டணிகளான பாரிவேந்தர், ஓ.பன்னீர்செல்வம், சௌமியா அன்புமணி, ஏ.சி.சண்முகம் ஆகியோர் மட்டுமே இரண்டாம் இடம் பிடிக்கிறார்கள்.

























































# விருப்ப சந்தா 500 ரூபாய் செலுத்துங்கள்




மனிதருக்கு ஆரோக்கியமான உடல், அமைதியான மனம், போதுமான பணம், நிறைய அன்பு, மகிழ்ச்சி தேவைப்படுகிறது. இவற்றை அடைவதற்கு லாப நோக்கமின்றி வழி காட்டுவதே ஞானகுரு மகிழ்ச்சி இதழின் நோக்கம். இந்த இதழுக்கு விருப்ப சந்தா 500 ரூபாய் கட்டுங்கள். ஞானகுரு பதிப்பகத்தின் முந்திய இதழ்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

**GPAY : +91 72997 53999**

# ஆன்லைன் கவுன்சிலிங்

**திருமணத்துக்கு முன் / பின் குழப்பங்கள், காதல் பிரச்னைகள், குழந்தை வளர்ப்பு தடுமாற்றங்கள், முடிவு எடுப்பதில் சிரமம் போன்ற மன நல சிக்கல்களை மனம்விட்டுப் பேசுங்கள்...**




மனவள ஆலோசகர் **எஸ்.கே.முருகன்**

**ஜிஜி ரிலேசன்ஷிப் கவுன்சிலிங்.**

முன்பதிவுக்கு : +91 80725 89355